Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 348
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 1 ஷஃபான் 14 வெள்ளிக்கிழமை [17-11-67]

## தமிழரசுத் தலைவர்கள் விரைவில் பிரதமரை சந்திப்பர்

யாழ்ப்பாணம், வெள்ளி

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 30-ம் திகதி கட்சிப் பொதுச்சபை கொடுத்த அவகாசம்பற்றி கட்சியின் செயற்குழு நேற்று ஆலோசனைசெய்ததாகத் தெரிகிறது. இதுசம்பந்தமாக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த தூதுக்குழுவொன்று பிரதமரைப் பேட்டிகண்டு நிலைமையை விளக்குவதென இங்கு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இப்பிரச்னை மிக முக்கியமான தொன்றாக இன்று இருப்பதால் இம்மாத முடிவுக்



குள்ளேயே பிரதமரைப் பேட்டிகாணவேண்டுமென

[5-ம் பக்கம் பார்க்க]

# பொதுச்சபை தீர்மானத்தை செயல்படுத்தும் பொறுப்பு

## திரு. எஸ். ஜே. வி. யிடம் செயற்குழு ஒப்படைத்தது


### பத்திரிகை உறவுக்குழு நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை நிறைவேற்றிய தீர்மானங்களை அமுல் செய்வதற்கான வழி முறைகள் பற்றி தமிழரசுக்கட்சியின் செயற்குழு நேற்றுக் காலை கூடி ஆராய்ந்தது. இதுசம்பந்தமாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை திரு. எஸ். ஜே. வி, செல்வநாயகத்திடம் விடுவதென செயற்குழு தீர்மானித்தது.

செயற் குழுக்கூட்டத்தின் முடிவில் கட்சியின் பொதுச் செயலாளர் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

தமிழரசுக் கட்சி பார்லிமெண்ட் அங்கத்தவர் எவரும் அல்லது கட்சியின் கிளையைச் சேர்ந்தவர்களோ அல்லது கட்சியின் ஓர் உறுப்பைச் சேர்ந்தவர்களோ பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுக்கக்கூடாதென்றும் செயற்



குழு தீர்மானித்தது. கட்சித் தலைவர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன், செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரைக் கொண்ட பத்திரிகை உறவுக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

செயற்குழுவின் அடுத்தகூட்டம் டிசம்பர் மாதம் 15-ம் 16-ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறும் [நநி]

## வல்லை கோரவிபத்து

## டாக்டர் மரணமானர்

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்லைச்சந்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பஸ்—கார் மோதலில் படுகாயமடைந்த மற்ருருவரான பருத்தித்துறை வைத்திய சுகாதார அதிகாரியான டாக்டர் ஜீவநாயகம் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானர்

இவ்விபத்தில் ஏற்கனவே ஒரு வாலிபர் ஸ்தலத்திலேயே மரணமானதும், மற்ருெரு வாலிபர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானதும் தெரிந்ததே.

இதில் படுகாயமடைந்த மற்றும் இரு சகோதரர்கள் மிகவும் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (ந.நி.)

## "சாதாரண வேகத்திலேயே காரை ஓட்டினேன்"

யாழ்ப்பாணம், வெள்ளி

''வல்வெட்டித்துறை நோக்கிச் சாதாரண வேகத்தில் நான் காரை ஓட்டிச்சென்றேன். முன் ஆசனத்தில் டாக்டர் ஜீவநாயகம் இருந்தார். பின் ஆசனத்தில் தவதாசன், தவராசா, கண்ணதாசன் ஆகியோர் இருந்தனர். வல்லை ரோட் சந்திக்குக் கிட்ட 'ஹோர்ன்' அடித்து ரோட்டை கடந்து செல்ல முற்பட்டபோது எதிரே வந்த பஸ், காரின் இடதுபக்கத்தில் அடித்தது. அதன்பின் என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது.''

வல்லை கார்-பஸ் விபத்தில் மரணமான டாக்டர் ஜீவநாயகம் ஆசிரியர் சரவணமுத்து தவரத்தினம் ஆகியோரின் மரணவிசாரணையின்போது ஜோன் குணநாயகம் மேற்கண்டவாறு கூறினர்.

உத்தியோகப் பற்றற்ற மாஜிஸ்திரேட் திரு. எஸ் கனகரத்தினம் மரணவிசா

[8-ம் பக்கம் பார்க்க]

## அறிக்கை விடுவோர் மீது நடவடிக்கை

### பொதுச் சபைக்கூட்ட வாக்குவாதத்தின் விளைவு

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக்கட்சியின் கட்டுப்பாட்டைமீறி பத்திரிகைகளுக்கு அறிக்கைவிடும் உறுப்பினர்களை உடனடியாகக் கட்சியிலிருந்து வெளியேறுவதென தமிழரசுக்கட்சி பொதுச்சபை முடிவு செய்துள்ளதாகவும் இப் பொறுப்பை பொதுச்சபை, கட்சித் தலைமைப்பீடத்திடம் விட்டுள்ளதாகவும் தெரிகிறது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக்கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாகும்.

தமிழரசுக்கட்சி உடனடியாக அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமென இப்பொதுச்சபையில்பேசிய வடபகுதியைச்சேர்ந்த எம். பி.ஒருவர், கட்சியின் முன்னுள் செனட்டர் ஒருவரைப் பார்த்துக் காரசாரமாகப் பேசியதைத் தொடர்ந்தே தமிழரசுக்கட்சிப் பொதுச்சபை இவ்வாறு தீர்மானித்ததாம்,

திருமலை தேசியமயப் பிரச்னை பற்றி இந்த எம். பி. தனது அபிப்பிராயத்தை இங்கு தெரிவித்துக்கொண்டிருக்கையில், சம்பந்தப்பட்ட முன்னுள் செனட்டர் ஒருவர் அடிக்கடி குறுக்கிட்டுப்பேசியதாகவும் அப்போது இந்தஎம்.பி.கோபங்கொண்டு அவரைப் பார்த்து, இரகசியப்பொலிசாரின் பிரதிநிதியாக இவர்

(5-ம் பக்கம் பார்க்க)

## சென்னை இசைவிழாவில் நீதியரசர் தம்பையா உரை

### என். கே. பத்மநாதன் நாதஸ்வரம்

சென்னை, நவ. 16

சென்னை சங்கீத சபையின் வருடாந்த இசைவிழா டிசம்பர் மாதம் 20-ந்தேதி ஆரம்பமாகும். இவ்வருடம் தியாகராஜ சுவாமிகளின் 200-வது ஜெயந்திவிழாவும் கொண்டாடப்படவிருக்கின்றது. இதற்கான விசேஷ நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இவ்விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவதற்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு, தம்பையா கியூ. ஸி. அழைக்கப்பட்டுள்ளார். டிசம்பர் 20-ந் தேதி நீதியரசர் தம்பையா உரை நிகழ்த்துவார்.

டிசம்பர் 29-ந் திகதி நாதஸ்வர வித்துவான், யாழ்ப்பாணம் என். கே. பத்மநாதன் கோஷ்டியினர் சென்னையில் நடைபெறும் சங்கீதவிழாவில் இசைவிருந்தளிப்பார்கள். இக்கோஷ்டியில் திரு. சண்முகசுந்தரமும் செல்வார்.

## கல்முனை உபதேர்தலில தமிழரசுக்கட்சி அபேட்சகர்

### செயற்குழுக் கூட்டத்தில் பரிசீலனை

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்முனைத் தொகுதி இடைத்தேர்தலுக்கு தமிழரசுக்கட்சி வேட்பாளராக செனட்டர் மசூர் மௌலானவை நியமிக்க வேண்டாமெனக்கோரி கல்முனைத் தொகுதியைச் சேர்ந்தசிலர் அனுப்பிவைத்திருந்த சுமார் 20 கடிதங்கள் நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் சுமார் 2 மணிநேரம் பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரிகின்றது

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சித் தலைமைக்

(5-ம் பக்கம் பார்க)

ஜி. ஸி. ஈ. தமிழ்மொழி 'அ' பாடத்திட்டத்துக்கான மாதிரி வினு-விடைகளை 6-ம், 7-ம் பக்கத்தில் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### சாவகச்சேரி நகரசபை
## ஏல விற்பனவு

சாவகச்சேரி நகரசபைக்குரிய கழிக்கப்பட்ட பொருட்கள் 1967-ம்ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கந்தோர் வளவில் விற்கப்படும். பொருட்களின் விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

[இ. டா. சிவகுரு]
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
12-11-67. 332

## விளம்பரம்

### வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பின்வரும் காலியான ஸ்தானங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் பத்திரங்களுடன் கல்வித் தராதரப் பத்திரம், பிறப்புச்சாட்சிப் பத்திரம், நற்சாட்சிப் பத்திரப் பிரதிகள் இணைத்து 8-12-67-க்கு முன்னர் பதிவுத் தபாலில் விண்ணப்பித்தல் வேண்டும்.

**கல்லிங் ஒப்பரேற்றர்**
**HULLER OPERATER**

தராதரம்: ஜே. எஸ். ஸி; 5 வருடங்களுக்குக் கல்லிங் செய்த அனுபவமும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல்வேண்டும்.

வேதனம்: 80—200 / 8 x 7 1/2—6 x 10

அரசாங்க விகிதப் படிகளுடன் (வாடகைப்படி நீக்கி)

பிணை: உரொக்கம் ரூ. 1000/-; ஆதனம் ரூ. 2000/-.

**கணக்கு லிகிதர்**

தராதரம்: தூயகணிதம், கணிதம், கணக்குப்பதிவியல் ஆகியவற்றில் ஒன்று உட்பட 5 பாடங்களில் திறமை சித்தியுடன் க. பொ. த. ப. (சாதாரணம்) சித்தியடைந்தவராயும், கூட்டுறவுப் பயிற்சிச்சாலையில் சாதாரணப் பிரிவில் சித்தியடைந்தவராயும் இருத்தல் வேண்டும். அல்லது

கூட்டுறவுப் பயிற்சிச்சாலையில் உயர்தரப் பிரிவில் சித்தியடைந்தவரா யிருத்தல் வேண்டும். அல்லது

களிட்ட தொழில் நுட்பக் கல்லூரி கணக்குப் பதிவியலாளர் வணிகத் தகுதிப் பத்திரம் (இரண்டாம் வருடம்) சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

வயது: 20—35 வரை.

வேதனம்: 80 — 250 / 17 x 10

அரசாங்க விகிதப்படிகளுடன் (வாடகைப்படிநீக்கி)

பிணை ரூபா 500/-

**காவலாளி**

தராதரம்: கல்வி 8-ம் வகுப்பு. வயது 21—35-க்கும் இடைப்பட்டதாக இருத்தல்வேண்டும்.

வேதனம்: மொத்தம் ரூ. 100/-, பிணை ரூ. 200/-:

**கூலியாள்**

தராதரம்: வயது 22—30-க்கும் இடைப்பட்டதாக இருத்தல்வேண்டும்.

வேதனம்: மொத்தம் ரூபா 100/-.

பிணை ரூ. 100/-.

காரியதரிசி.

334

## யாழ்ப்பாண மாநகர சபை
### கேள்வி அறிவித்தல்
**சந்தைக் குத்தகை-1968**

1—1—68 தொடக்கம் 31—12—68 வரை கீழ் வரும் சந்தைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 28—11—67-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு மூத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல்வேண்டும். கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் போடுதல்வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 28—11—67-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணி வரை அதற்குரிய பணத்தைச் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும்.

**சந்தைகளின் பெயர்கள்**

1. பெரியகடை மரக்கறிச்சந்தை.
2. பெரியகடை மீன் சந்தை.
3. சின்னக்கடைச்சந்தை
4. செங்குந்தர் சந்தை
5. அரியாலைச் சந்தை —பழையது.
6. அரியாலைச் சந்தை —புதியது.
7. மூத்திரைச் சந்தை.
8. கொழும்புத்துறைச் சந்தை.
9. நாவாந்துறைச்சந்தை —பழையது.
10. நாவாந்துறை சந்தை —புதியது.
11. பாசையூர்ச்சந்தை.
12. பண்ணை மீன் சந்தை.
13. நாச்சிமார் கோவில் சந்தை. (வண்ணார் பண்ணை சந்தை)
14. சுண்டிக்குளிச் (நரிக் குண்டு) சந்தை.
15. பெரியகடை மீன் சந்தையில் சாமான்கள் கட்டும் கடதாசி விற்குமிடம்.

இதர விபரங்களை நேரில் வந்து அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
13-11-67. 333

## WANTED
**Administrative Assistant cum Accountant**

**Qualifications:** Administrative Talent and Business Experience. A graduate preferred.

**Age:** Between 35 and 50 years

**Security:** Rs:1000/-in cash and Rs: 2000/- in properties.

**Salary:** Rs: 400/. p.m all inclusive.

The selected candidate will be placed on a suitable scale after one year,s satisfactory service.

Only Ceylon Tamils need apply. Applications close on 30/11/67.

Envelope should be marked "Administrative Assistant cum Accountant" on top left hand corner

President,
Vali-West M.P.C.S. Union. Ltd.,
Chankanai. 331

## பிணையில் சென்றார்

நீர்கொழும்பு, வியாழன்
அரசாங்க ஊளியரொருவர் மீது தொடரப்பட்ட கொலைமுயற்சி வழக்கில் ரூபா 500 பிணையில் மேற்படி எதிரி தந்தையின் மேற்பார்வையில் விடப்பட்டார். இவ்வழக்கில் எல்.ஏ. ஜோதிசேனு என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாக அரசாங்க ஊளியரானமிக்கல்கெட்டிகே லயனல் திரேச என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இவ்வழக்கு விசாரணை நீர்கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர் திரு ஓ. எல். டி. கிரேஸ்டர் முன்னிலையில் நடந்தது.

### ஹோட்டல் சிப்பந்திகள் சங்கம்

கொம்பனித்தெரு, வியா.
கொழும்பின் பல பகுதிகளிலும் உள்ள ஹோட்டல்களில் கடமையாற்றும் ஊழியர்கள் பலர் ஒன்றுசேர்ந்து ஒரு சங்கம் ஒன்றை அமைத்து முதலாளிமார்களினால் தங்களுக்கு ஏற்படும் இன்னல்களை தொழில் அமைச்சருக்கும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எடுத்துக்கூற இருப்பதாகவும் இச்சங்கம் இவ்வருட இறுதிக்குள் அமைக்கப்படும் என்றும் முதல் கொழும்புப் பகுதியிலும் பின் நாட்டின் பலபகுதிகளிலும் ஹோட்டல் சிப்பந்திகள் சங்கம் அமைத்து ஹோட்டல் சிப்பந்திகளின் குறைகளை உடனுக்குடன் அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.

### திருக்கார்த்திகை விழா

சங்கானை, வெள்ளி
சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி கோவிலில் திருக்கார்த்திகைத் திருவிழாஇன்று கொண்டாடப்படும்.

அன்றைய தினம் கோவிலுக்கு மின் விளக்கேற்றும் வைபவமும் இடம்பெறும்.

சுழிபுரம், வியா.
சுழிபுரத்தில் இருந்து நாற்பதுக்கு மேற்பட்டோர் கோஷ்டி கதிர்காமத்தில் நடைபெறும் கார்த்திகை தீப விழாவுக்கு தனிப்பட்ட பஸ் வண்டி யொன்றில் இன்று பயணமானார்கள். இக்கோஷ்டியினர் வழக்கம் பறை அம்மன்கோவில் முன்றலில் இருந்து தமது பிரயாணத்தைத் தொடங்கினர்.


நியூ காஸல்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி-அஞ்சலிதேவி
நடித்த
கணவனே
கண்கண்ட தெய்வம்

மனோகரா
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
Daily at 2-30, 6-30, & 9-45 Pm
Pre Poya & Poya 10-30 a m
தேவானந், சைராபானு,
சசிகலா நடித்த
பியார் மொஹபத்
PYAR MOHABBAT
ஹிந்தி (ஈஸ்ட்மன் கலர்)
இசை-சங்கர், ஜெயகிஷன்

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 p m
Audie Murphy
Darren McGavin
in
BULLET FOR A BADMAN


## வரி விளம்பரம்

### நன்றி நவிலல்

மர்ஹூம் U. M. ஐத்துரூஸ் அவர்களின் ஈமக்கிரியையின் பொழுதுநேரில் வருகை தந்த உறவினர்கள், சகோதரர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், அனுதாப நிகழ்ச்சி நடத்தியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்களது மனமார்ந்தநன்றி குழந்தை உம்மா ஐத்துரூஸ், சுபைத்தா U.M.I. ஷாஹூல் ஹமீது, ஸாஹிரூ, S. M தாஹிர், M. M. அப்துல்காதர், S. M. சுல்த்தான், M. M. மன்சூர், தங்கம்மா, செயினம்பு, சதக்கத்தும்மா, கதீஜா உம்மா, மீரா உம்மா. 2133

### விதைகிழங்கு விநியோகம்

சங்கானை, வியா.
உருளைக்கிழங்கு விதை வலி-மேற்கு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. இவ்வருட ஐப்பசி, கார்த்திகை, மார்கழி கால போகத்திற்கென விநியோகிப்பதற்கென வந்திருந்த விதைகளில் முதல் முறையாக வந்துள்ள 160 அந்தர் கிழங்கிலும் தாங்கள் கேட்டிருந்த தொகைகளை முதல் பெற்றுக்கொள்வதில் சிரத்தையாகக் காணப்பட்டனர் விவசாயிகள்.

தேவைக்கு உரிய விதைகளில் ஒருபகுதியே கிடைத்துள்ளதால் அவை விகிதாசாரப்படி பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

### தேவை

ஸ்ருடியோ வேலையாளர்:
ஸ்ருடியோ ஒன்றுக்கு திறச்சிங் வேலைகள் தெரிந்தவர்கள் தேவை. விபரங்களுக்கு ராஜன்ஸ் ஸ்ருடியோ, கண்டி ரோட், கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு நேரடியாக தொடர்பு கொள்ளவும். 2569

நெசவு தெரிந்தவர்கள்
திருக்கேதீச்சர நெசவுத் தொழிற்சாலைக்கு நெசவுத் தொழில் தெரிந்த ஆண்களும், பெண்களும் 30-11-67 வரை சேர்த்துக்கொள்ளப் படுவர். இருபாலார்க்கும் தங்க வசதிகள் செய்துதரப்படும். விரும்புவோர் கீழ்க் காணும் முகவரிக்கு மனுப் பண்ணவும். அல்லது நேரில் சந்திக்கவும். அதிபர், திருக்கேதீச்சர நெசவுத் தொழிற்சாலை, திருக்கேதீச்சரம். 2274

### விற்பனைக்கு

காணி
ஊரெழு மேற்கில் கருங்கலம்புலம், ஞானிகலட்டி, அம்பலப்புலம், பயத்தங்கலட்டி ஆகிய காணிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சி. இரத்தினசிங்கம், கருங்கலம்புலம், ஊரெழு மேற்கு. 2130

### ஐ. நா. வில் சீனு

நியூயோர்க் நவ. 16
சீனுவை ஐ. நா. வில் அமர்த்துவதற்கான பிரேரணை ஒன்றை ஐ. நா. பொதுச் சபை நாளை கூடி ஆராயும்.


இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு
பிளாஸா [வெள்ளவத்தை]
கெப்பிட்டல் [கொழும்பு]
மைலன் [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்
எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்
முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்!
100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.
மற்றும்
ஜெயலலிதா, ஜெயந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
நடித்த
தேவர் பிலிம்ஸ்
முகராசி
டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
லக்ஷ்மி [சுரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனு — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
..ந்தையும் தெய்வமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியா பற்றி ஐ. நா. விரைவில் முடிவு எடுக்க வேண்டும்

## இந்தியப் பிரதிநிதி வலியுறுத்தல்

நியூயோர்க், நவ. 16

**மேற்கு ஆசிய விவகாரம் பற்றி இறுதியான முடிவொன்றை, இனியும் தாமதிக்காமல், உடனடியாக எடுக்கவேண்டுமென இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி, ஐ. நா. பந்தோபஸ்துசபையைக் கேட்டுக் கொண்டுள்ளார்.**

ஏற்கனவே மேற்கு ஆசியப் பிரச்னை பற்றித் தாமதம் ஏற்பட்டுவிட்டது எனவும், சபை இனித் தாமதிக்காது, ஒரு முடிவை எடுக்க வேண்டியது அவசியமென்றும் அவர் வலியுறுத்தினர்.

பிரிட்டிஷ் பிரதிநிதி பேசுகையில், இவ்வார முடிவுக்குள், ஐ. நா. சபை மேற்கு ஆசியப் பிரச்னையில் மிக முக்கியமான ஒரு முடிவை எடுக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினர்.

### அமெரிக்கப் பிரதிநிதி

இஸ்ரேல் துருப்புகள் அரபுப் பிராந்தியங்களிலிருந்து வாபஸ்பெறவேண்டுமென்றும் ஆனல், இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையேயான நேரடிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் நிறுவப்படும் பாதுகாப்பான எல்லைகளின் அடிப்படையிலேயே இந்த வாபஸ் நடைபெற வேண்டுமென்றும் அமெரிக்கப் பிரதிநிதி கூறினர்.

மேற்கு ஆசிய பிரச்னை சம்பந்தமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவிருந்த ஆர்ஜெண்டீனவும், பிரேஸிலும், இஸ்ரேல் ஜனதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க, அத் தீர்மானத்தைக் கைவிட்டிருக்கின்றன.

மேற்கு ஆசியா பற்றி ஆராய, ஐ. நா. பந்தோபஸ்துசபை, செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடுகிறது.

---

சைப்பிரஸில்

# துருக்கி - கிரேக்க பிரஜைகள் துப்பாக்கி மோதல்

நிக்கோஸியா, நவ. 16

சைப்பிரஸில், துருக்கிய சைப்பிரஸியருக்கும், கிரேக்க- சைப்பிரஸியருக்குமிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இச் சண்டையில், சிறிய இயந்திரத் துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டன.

இரு சாராருக்குமிடையே நடைபெற்ற இச் சண்டையில், சைப்பிரஸிலுள்ள ஐ. நா. சமாதானப்படை ஒரு போர்நிறுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### ஆட்சேபம்

ஐ. நா. சமாதானப்படையினரின் ஆயுதங்களைப் பலாத்காரமாகக் களைந்ததாக சமாதானப்படையின் தளபதி, சைப்பிரஸ் அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

சண்டை நடைபெற்ற இடத்தைப் பார்வையிட ஐ. நா. பார்வையாளர் சென்றிருந்தபோது, அரசாங்கத் துருப்புகள், பார்வையாளர்களின் ஆயுதங்களைக் களைந்துவிட்டதாக அப் புகாரில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

# தென் அரபிய சமஷ்டிக்கு நவம்பர் 30-ல் 'விடுதலை'

## பிரிட்டன் வழங்கும்

லண்டன், நவ. 16

இம்மாதம் 30-ந் திகதியன்று, தென் அரபிய சமஷ்டிக்குப் பிரிட்டன் சுதந்திரம்வழங்குமென்றும், அதற்கிடையில், அங்கிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் விலக்கப்பட்டு விடுமென்றும் பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுன், காமன் சபையில் அறிவித்துள்ளார்.

தென் அரபிய சமஷ்டியின் தேசியக் கட்சிகள் இரண்டில் ஒன்ருன தேசிய விடுதலை முன்னணியுடன் நவம்பர் 20-ந் திகதி, ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமென்றும், இலாகாவற்ற மந்திரியான சாக்கிலடன் பிரபு, பிரிட்டிஷ் தூதுகோஷ்டிக்குத் தலைமை வகிப்பாரென்றும் திரு. பிரவுன் மேலும் தெரிவித்தார்

---

# ஐ. நா. பந்தோபஸ்து சபை போர்ச்சுகலுக்கு கண்டனம்

## வெள்ளைக் கூலிப்படைக்கு உதவி அளித்ததற்கு

நியூயோர்க், நவ. 16

ஐ. நா. பந்தோபஸ்து சபை, போர்ச்சுக்கலைக் கண்டனஞ்செய்துள்ளது. போர்த்துக்கேய அங்கோலாவை வெள்ளைக் கூலிப்பட்டாளத்தினர் உபயோகிப்பதற்கு போர்ச்சுகல் தடை எதுவும் விதிக்காதது பற்றியே, ஐ. நா. பந்தோபஸ்து சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வெள்ளைக் கூலிப்படையினருக்கு உதவுவதைப் போர்ச்சுகல் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் ஐ. நா. பந்தோபஸ்து சபை போர்ச்சுக்கலைக் கேட்டுள்ளது.

### ஏற்றுக்கொள்ள முடியாது

ஆனல், பந்தோபஸ்து சபையின் கோரிக்கை, தமது நாடு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்லவென்று போர்த்துக்கல் பிரதிநிதி கூறினர்.

இதற்கிடையில் ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை ஸ்தாபனத்தின் காரியதரிசி, ஆபிரிக்கப் பிரதேசங்களில் பிடிக்கப்பட்ட வெள்ளைக்கூலிப் படையினரை இனிமேல் ஆபிரிக்க நாடுகளுக்குத் தாம் வரமாட்டோம் என்று உறுதிமொழி அளிக்கும் பட்சத்தில் தான், அவருக்குச் சொந்தமான ஐரோப் [illegible] அனுப்பமுடியுமென அறிவித்துள்ளார்.

---

# மாமிசம் உண்ணும் பசு பாரீர்!

கௌஹாத்தி, நவ, 16

இங்குள்ள ஒரு பசு, கடலையையும் புல்லையும் வெறுத்தொதுக்கிவிட்டு மீன், கோழி மற்றும் இறைச்சி வகைகளை ஆர்வத்துடன் புசிக்கிறது.

அதற்குமிகவும் விருப்பமான உணவு, புருக்களின் மாமிசமேயாகும்.

இங்கிருந்து 5 மைல் தொலைவிலுள்ள காமாக்யா கோவிலின் சுற்றுப்புறங்களில் சுற்றித்திரியும் இப்பசு, கவனமின்றிச் செல்லும் புருக்களை 'லபக்' கென்று பிடித்துச் சாப்பிடுகிறது.

மரக்கறி உணவுப் பிராணிஒன்று, இவ்விதம் மாமிசத்தை விரும்பி உண்பது பற்றித் தாம் இதுவரை கேள்விப்பட்டதே கிடையாது என்று இங்குள்ள மிருகவியல் நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

பெருந்திரளானமக்கள் இப்பசுவைப் பார்வையிட வருகின்றனர். ஒரு புனிதமான பிராணி, இவ்விதம் மாமிசம் உண்பது, இம் மக்களுக்கு விசனத்தை உண்டாக்குவதாக அமைந்துள்ளது.

---

# பி. பி. ஸி. சிறுகதை போட்டி

லண்டன், நவ. 16

பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி. பி, ஸி.) நடாத்தும் சிறுகதைப் போட்டிக்கு இதுவரை சுமார் 240 வெளிநாட்டுக் கதாசிரியர்கள் சிறுகதைகளை அனுப்பியுள்ளார்கள். இவர்களில் 13 பேர் இலங்கையர்கள், 42 இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்படும் சிறுகதைகள் அடுத்த ஜனவரி மாதம் ஒலிபரப்பாகும். 1968-ம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதிவரை இந்தப் போட்டிக்கு கதைகளை அனுப்பிவைக்கலாம் என பி. பி. ஸி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

---

# இந்தியாவில் புதிய முத்திரைகள்

புதுடில்லி, நவ. 16

இந்தியாவில், புதிய முத்திரைகள் வெளியிடப்படவிருக்கின்றன. இவை நாளை முதல் பொதுமக்கள் புழக்கத்துக்கு வருமெனத் தெரிகிறது.

இப் புதியமுத்திரைகளில், 'இந்தியா' என்று இப்போதிருக்கும் சொல்லுக்கு அருகில், 'பாரத்' என்ற சொல்லும் தேவநகரி எழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கும்.

---

# இரண்டு வருடம் அலைந்து திரிந்த அரசாங்க 'பைல்'

## உப ராஷ்டிரபதி கிரி கதை

ஆமதாபாத், நவ. 16

அரசாங்க 'பைல்' ஒன்று, சிவப்பு நாடா காரணமாக இரண்டு வருடங்கள் தூங்கியதையும், 'கூட்டு நடவடிக்கை' மூலம் ஒரு மணி நேரத்தில் இந்த பைல் விஷயம் முடிவு செய்யப்பட்டதையும் இந்திய உப-ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி நேற்று இங்கு எடுத்துரைத்தார்.

இணைந்திருந்த சென்னை ராஜ்யத்தில் தாம் மந்திரியாக இருந்தபோது நிகழ்ந்த சம்பவத்தைத் திரு. கிரி குறிப்பிட்டார்.

ஒரு நாள் அவரது மேசைக்குப் பெரிய பைல் கட்டொன்று வந்தது. சுமார் இரண்டு வருடங்கள், ஒரு மேசையிலிருந்து மற்ருெரு மேசை என ஒவ்வொரு மேசையாகப் பைல் கட்டு யாத்திரை செய்துவிட்டுக் கடைசியாக, மந்திரியின் மேசைக்கு வந்தது.

உடனே பைல் விஷயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், நபர்களையும் மந்திரி அழைத்தார். அவர்களுடன் விஷயத்தை விவாதித்தார். அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொண்டதும், இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இத்தனையும் ஒரு மணி நேரத்தில் முடிந்துவிட்டது.

இத்தகைய கூட்டு நடவடிக்கை முறையை மந்திரிகள், நிர்வாகிகள் அனைவரும் பின்பற்றினல், வீண் காலதாமதத்தை நீக்கி, சிவப்பு நாடாவை ஒழித்துக்கட்டமுடியும் என்று திரு. கிரி குறிப்பிட்டார்.

'அரசாங்க நிர்வாகப் பிரச்னைகள்' பற்றிப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

---

வட பீஹாரில்

# அனுமான் ஊர்வலத்தில் நடந்த கலவரம்

## 5 பேர் மாண்டனர்; 37 வீடுகள் தீக்கிரை

பட்னு, நவ. 16

வடக்கு பீஹாரில் முஸாபார்பூர் ஜில்லாவிலுள்ள ராம்பூரில் நேற்றுமுன்தினம் நடந்த கைகலப்புகளில் 5 பேர் மாண்டனர் என்றும், 30 பேர் காயமடைந்தனர் என்றும் உத்தியோகபூர்வமான செய்திகள் கூறுகின்றன.

மஹாவீர அனுமான் பக்தர்கள் ஊர்வலம் சென்றபோது இக்கலவரங்கள் நடந்தன. 37 வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. இதுசம்பந்தமாக 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

---

# அஸ்ஸாம் மீதான பாகிஸ்தான் நோக்கு

## முதல் மந்திரி கண்டனம்

கல்கத்தா, நவ. 16

அஸ்ஸாம், பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்று பாகிஸ்தான் முன்னுள் வெளியுறவு மந்திரி திரு. பூட்டோ உரிமை கோருவது விந்தையாக உள்ளதென்றும், ஆதிக்க விஸ்தரிப்பு நோக்கத்தை இது காட்டுகிறதென்றும் அஸ்ஸாம் முதல் மந்திரி திரு. சாலிஹா தெரிவித்துள்ளார்

பாகிஸ்தானின் மோசமான நோக்கங்களை நாம் அறிவோம். எனவே, அஸ்ஸாம் சம்பந்தமாகமக்களும் மத்திய அரசினரும் விசேஷ கவனம் செலுத்தி வரவேண்டியுள்ளது. வட கிழக்கு எல்லைப் பிராந்தியத்தை அரசியல் ரீதியாகவும், இதர வகைகளிலும் மிகவும் வலுவுடையதாக்குவது அத்தியாவசியம் என்றும் திரு. சாலிஹா மேலும் கூறியுள்ளார்

---

# சர்வதேச இந்துமத மகாநாடு

## நேபாள மன்னர் ஆரம்பித்துவைப்பார்

லக்னே, நவ. 16

அடுத்த வருடம் ஏப்ரில் மாதம் 13-ம் தேதி ஹரித்துவாரில் ஆரம்பமாகவிருக்கும் 2நாள் சர்வதேச இந்துமதமகாநாட்டை நேபாளமன்னர் ஆரம்பித்து வைப்பார்.

பிருந்தாவனத்திலுள்ள உலக இந்துமத அமைப்பு ஏற்பாடு செய்யும் இந்த மகாநாட்டில் ஆசிய-ஆபிரிக்க நாடுகளிலிருந்து சுமார் 2,000 பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

இந்துமததத்துவத்தையும் கலாச்சாரத்தையும் அமெரிக்காவிலும ஐரோப்பிய நாடுகளிலும் பரப்புவதற்கான திட்டங்கள் அம்மகாநாட்டில் வகுக்கப்படும்

---

# பணமோசடி வழக்கில் ராதா

செங்கற்பட்டு, நவ. 16

பணமோசடி வழக்கில் எம். ஆர். ராதாவுக்குப் பூந்தமல்லி கோர்ட், ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது. இதை எதிர்த்துத் தாக்கல்செய்யப்பட்ட அப்பீல் வழக்கின் விசாரணை, செங்கற்பட்டு செஷன்ஸ் கோர்ட்டில் வந்தது. செஷன்ஸ் நீதிபதி விடுமுறையில் இருப்பதால், வழக்கு இம்மாதம் 22-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளுக்கு தொண்டு புரிதல் என் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் விருப்பமாகும். இந்த விருப்பம் எப்போதும் என்னை ஏழைகளிடமே கொண்டுபோய் சேர்த்தது. அவர்களுடன் சேர்ந்து அவர்களில் ஒருவனுகும். ஆற்றலையும் எனக்குத் தந்தது.

—காந்திமகான்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

சாம்ப்பாவணம் பிலவங்கவரு கார்த்திகை மீ 1உ (17-11-67)

## வரவேற்கத்தக்க முடிவு

தேசிய அரசாங்கத்துடன் தொடர்ந்து ஒத்துழைப்பதென்று தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை செய்துள்ள முடிவு இன்றுள்ள நிலையில் வரவேற்கத்தக்கவிவேகமான முடிவு என்று சொல்லலாம்.

அரசாங்கத்துடன் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிப்பதென கட்சியின் பொதுச்சபை தீர்மானித்துள்ள போதிலும் ஜனவரி மாதம் 30-ந் திகதிக்குள் மாவட்டசபைமசோதாவை அரசாங்கம் கொண்டுவரவும் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட சமயத்தில் தமிழரசுக்கட்சியினருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைப் பிரதமர் எடுக்கத்தவறினுலும் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது பற்றி ஜனவரி 31ந் திகதி பொதுச்சபைமீண்டும்கூடி ஆலோசிக்கும் என்பதுதான் தீர்மானத்தின் அர்த்தமாகத் தொனிக்கிறது. இதை வேறு வார்த்தையில் சொன்னுல் தேர்தல்காலத்தில் தமிழரசுக்கட்சியினர் தமது வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபோது தமிழரசுக்கட்சியினருக்கு பிரதமர் கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு, தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை, தமிழரசுக்கட்சியினருக்கும் அரசாங்கத்துக்கும் ஜனவரி 30-ந் திகதி வரை அவகாசம் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாம்.

திருக்கோணமலைத் துறைமுகத்தை, தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியினரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அரசாங்கம் தேசியமயமாக்கியிருக்கிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மற்றுெரு தமிழ்க்கட்சியான தமிழ்க் காங்கிரஸின் ஆலோசனையையும் கூட அரசாங்கம் இது விஷயத்தில் கேட்கவில்லையென்றே தோன்றுகிறது. திருமலைத் துறைமுக தேசியமயப்பிரச்னை தவிர தமிழ்மக்களின் இதர பல குறைகளையும் தீர்ப்பதில் கூட அரசாங்கம் தவறிவிட்டதென்பதே தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர்களினது மட்டுமல்ல பொதுமக்களினதும் குற்றச் சாட்டாகும்.

என்றுலும் இந்த விஷயத்தில் தீவிரவாதிகளுக்கு இடம் கொடுத்து உடனடியாக அவசரப்பட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேருமல் அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுக்கும் முறையில் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியிருப்பதைப் பாராட்டலாம்.

இதே மனப்பான்மையுடன் தமிழ்ப்பொதுமக்களினதும் தமிழரசுக்கட்சியினதும் கோரிக்கைகளில் நியாயம் இருக்கிறதென்பதைப் பிரதமரும் உணர்ந்து ஆராய்ந்து குறைகளைக் களைய முன்வர வேண்டும். பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மத்தியிலும் தீவிரவாதிகள் உள்ளனர். ஆளும் கட்சியிலும் தீவிரவாதிகள் உள்ளனர். சிறுபான்மையினரின் உதவியும் ஒத்துழைப்பும் நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகமிக அவசியம்என்பது பிரதமருக்குத் தெரியாததல்ல. எனவே தீவிரவாதத்துக்கும் பெரும்பான்மை வகுப்பு வாதத்துக்கும் இடம்கொடுக்காமல், சிறுபான்மையினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் பயன்படுத்தக்கூடியதாக, விவேகத்துடனும், நிதானத்துடனும் பிரதமர் நடந்து கொள்வாரென நாடு எதிர்பார்க்கிறது.





தேசிய அரசாங்கத்துக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிப்பதென்று தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை தீர்மானித்திருக்கிறது. திருக்கோணமலைத் துறைமுகத்தை அரசாங்கம் தேசியமயமாக்கியதைக் கண்டித்தும் மந்திரி திரு. எம். திருச்செல்வம் மந்திரி சபையில் செய்யும் சேவையைப் பாராட்டியும் அவர்மீது நம்பிக்கை தெரிவித்தும் பொதுச்சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேற வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்திருக்கிறது. சென்றவாரம் நான் இதுபற்றி இப்பத்தியில் குறிப்பிட்ட போது "வெளியேற வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேருது என்று கூறியிருந்தேன். ஆனுல் தேசிய அரசாங்கம் அமைக்க ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்த தமிழரசுக்கட்சியினர் இப்போது அரசாங்கத்தின்மீது அதிருப்தியும் அவநம்பிக்கையும் கொண்டிருக்கின்றனரென்பது பொதுச்சபைக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்கள், ஜனவரி மாதம் 30-ந் திகதி வரை அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுப்பதென்ற அர்த்தத்தில் நிறைவேற்றப்பட்டதீர்மானம், கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் வெளியே வாலிபர்களும் தீவிரவாதிகளும் நடத்திய 'சத்தியாக்கிரகம்' ஆர்ப்பாட்டம் ஆகியவை மூலம் தெளிவாகியிருக்கிறது.

தேசிய அரசாங்கம் அமைக்க ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்த தமிழரசுக்கட்சியினரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், அது கொடுத்தமாற்றுத்திட்டத்தைப் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்து பதில் எதுவுமே சொல்லாமல், கட்சியினரை உதாசீனம் செய்துவிட்டு, திருமலைத் துறைமுகத்தை, தேசியமயமாக்குவதென்ற

...ர சாரம்

# அரசாங்கத்துக்கு அ...
# ஆனாலும் கண்டம் நீ...

தீர்மானத்துக்கு பிரதமர் அங்கீகாரமளித்தது தமிழரசுக்கட்சிக்குள் பெரும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. பிரதமர் நம்பிக்கை மோசடி செய்துவிட்டாரென்றும் இனியும் அரசாங்கத்தில் இருக்கத்தான்வேண்டுமா என்றும்கேள்விகள் குமுறல்களாக ஒலித்தன. இதன் விளைவுதான் அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டுமென்ற தீர்மானம் பொதுச்சபையில் கொண்டு வரப்பட்டது.

'அவகாசம்' கொடுக்கும் தீர்மானம் தீவிரவாதிகளுக்கும் திருமலையைச் சேர்ந்த தமிழரசுக்கட்சியினர் பலருக்கும் திருப்தி அளிக்கவில்லை. ஜனவரி 30-ந் திகதி வரை அவகாசம் கொடுத்திருப்பதற்கு முக்கிய காரணம் அதற்குள் மாவட்ட சபை மசோதாவைக் கொண்டுவருவதாகப் பிரதமர் வாக்குறுதியளித்திருப்பதுதான் என்பது தெளிவு. திருமலைத் துறைமுகத்தை தேசிய மயமாக்கிய முடிவில் இனிமாறுதல் செய்யப்படுமென எதிர்பார்க்கமுடியாது. தமிழரசுக்கட்சியினரும் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனுல் மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால், திருமலை துறைமுகத்தை தேசியமயமாக்கியதனுல் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை, அரசியல் விளைவுகளை. சமாளித்து தமிழ் மக்களினதும் தமிழ் பிரதேசத்தினதும், திருமலை தமிழ் மக்களினதும் நலனைப் பாதுகாத்துவிடலாமெனத் தமிழரசுக் கட்சியினர் எதிர்பார்க்கின்றனர், நம்புகின்றனர்.

## மாவட்டசபை மசோதா நிறைவேறுவது நிச்சயமா?

இத்தீர்மானம் எதிர்பார்க்கப்பட்டதுபோல் தோல்வியடைந்து விட்டது. ஆனுல் ஜனவரி மாதம் 30-ந் திகதிவரை அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுத்து அதற்குள் பிரதமர் தமிழரசுக்கட்சியினருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமென்று தமிழரசு வாலிப முன்னணியினர் நிறைவேற்றி சிபார்சுசெய்த தீர்மானத்தை பொதுச்சபை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நிறைவேற்றத் தவறமாட்டேன்" என்று கூறினுர். "மாவட்ட சபைகள் மசோதாவும் கொண்டு வருவேன். முன்னைய அரசாங்கங்கள் கொடுக்க ஒப்புக்கொண்டிருந்த அதிகாரங்களைவிடக் குறைவாகவே மாவட்ட சபைகளுக்கு நான் அதிகாரங்கள் வழங்குவேன்" என்றும் பிரதமர் தெரிவித்திருந்தார். ஆனுல் அச்சமயமே மாவட்ட சபைகள் மசோதாவும் கொண்டுவரப்பட்டிருந்தால் ஒரேஎதிர்ப்புடனேயே நிலைமையைச் சமாளித்திருக்கலாம். இனி மாவட்டசபை மசோதா கொண்டுவரப்பட்டால் அதற்கு மட்டுமல்ல, வேலையில்லாத் திண்டாட்டம், அத்தியாவசியப்பொருள்கள் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு முதலிய சகல பிரச்னைகளும் சேர்ந்து அரசாங்கத்துக்கு பெரிய எதிர்ப்பே உருவாகும்.

இதுதவிர ஆளும்கட்சிக்குள்ளேயே பிளவும் பிரிவினையும் கோஷ்டிப்பூசலும் வளர்ந்துவருவதாலும் அரசாங்கத்துக்கு பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கை குறைந்து வருவதும், சில சந்தர்ப்பவாதிகள் ஆளும் கட்சியிலிருந்து, அடுத்த தேர்தலில் வெற்றிபெறலாம் என்ற நினைப்புடன் வெளியேறி எதிர்க்கட்சியை நாடலாம். இதனுல் முன்னைய அரசாங்கத்துக்கு நேர்ந்தகதி இந்த அரசாங்கத்துக்கும் நேரவழி பிறக்கலாம். அரசாங்கத்துக்கு ஆபத்து நேருமென்பதால் மாவட்ட சபை மசோதாவைக் கொண்டுவருவதற்குப் பிரதமர் தாமதம் செய்யலாம். மாவட்ட சபை மசோதா பற்றி சில மாதங்களுக்கு முன் சர்ச்சை அதிகரித்தபோது, அப்படி ஒரு மசோதா இப்போது இல்லை; தமிழரசுக்கட்சியினர் இது பற்றி என்னுடன் ஆலோசனை நடத்தினர் அவ்வளவுதான்" என்று பிரதமர் பத்திரிகை நிருபர்களின் மாநாடொன்றைக் கூட்டிச் சொல்லவில்லையா?

ஆளும் கட்சிக்குள் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதே சமயம் பத்திரிகைகள் மீது பிரதமர் கண்டனம் தெரிவித்து எதிர்ப்பைத் தேடிக்கொண்டிருப்பதுடன் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் சட்டமொன்றையும் கொண்டுவர எத்தனிக்கிறுர். முன்னைய அரசாங்கத்துக்கு கடைசி நேரத்தில் ஏற்பட்ட சங்கடமான நிலையே இந்த அரசாங்கத்தையும் எதிர்நோக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இச்சமயத்தில் தான் தமிழரசுக் கட்சியும் அரசாங்கத்துக்கு ஜனவரி மாத முடிவுவரை அவகாசம் கொடுத்திருக்கிற...

ஜனவரிக்குள் மாவட்ட சபை மசோதா கொண்... வரப்படாவிட்டால் அல்ல... மிகக் குறைந்த அதிகார... ளுடைய மசோதா... கொண்டுவரப்பட்டால் ஜ... வரி 31-ந் திகதி கூடும் த... மரசுக்கட்சியின் பொது... சபை 'வெளியேறும்' தீ... மானம் நிறைவேற்றலா... தீர்மானம் நிறைவேறி... லும் நிறைவேருவிட்டாலு... ஊர்காவற்றுறை எம். ... திரு. வி. நவரத்தின... திருக்கோணமலை எம். ... திரு. எஸ். எம். மாணிக்... ராசா மற்றும் சிலரும் கட்... யிலிருந்து வெளியேறுவார்... ளென எதிர்பார்க்கலாம்.

### இருகட்சி ஆட்சி

இருகட்சி ஆட்சியே ஜ... நாயகம் சிறப்புறுவதற்கு... நிலை... றுவது... ம் சிற... தது. அதாவது பிரிட்டனி... கன்ஸர்வேட்டிவ் கட்சியு... தொழிற்கட்சியுமே ஆட்... பீடத்துக்கு வருவதற்... வாய்ப்புள்ளகட்சிகள். அங்... வேறு கட்சிகளிருப்பினு... கூட்டு ஆட்சிக்கு உதவு... நிலையிலேயே அவை இரு... கின்றனவேயன்றி ஆட்... அமைக்கும்நிலையி லில் ... அமெரிக்காவிலும் ஜனநா... கக் கட்சி, குடியரசுக்கட்... என இருகட்சிகளே ஆட்... அமைக்கும் நிலையிலுள்...

## தமிழ்க்கட்சிகள் தங்கள் நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்

சர்ச்சைக்குரிய மாவட்ட சபைகள் மசோதா தயாரிக்கப்பட்டு அது இப்போது பிரதமரின் பரிசீலனையிலிருக்கிறதாம். மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் தான் தமிழ் மொழிச் சட்ட [விசேஷ] விதிகளின் உண்மையான பயனை அனுபவிக்க முடியுமென்றும், மாவட்ட சபைகள் மூலமே தமிழ் மொழி, தமிழ் பிரதேசங்கள் பாதுகாக்க முடியுமென்றும் தமிழரசுக் கட்சியினர் கருதுகின்றனர்.

ஆனுல் மாவட்ட சபைகள் அமைப்பதை எதிர்க்கட்சியினர் வன்மையாக எதிர்க்கின்றனர். [அவர்கள் முன்பு ஆட்சிபீடத்திலிருந்தபோது மாவட்ட சபைகள் அமைக்க ஒப்புக்கொண்டிருந்தது வேறுவிஷயம்] இதே சமயம் ஆளும் கட்சியிலுள்ள பலரும் மாவட்ட சபைகளை எதிர்க்கின்றனர். தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் மற்றுெரு தமிழ்க்கட்சியும் ஆளும் கட்சியில் அங்கம்வகிப்பதுமான தமிழ் காங்கிரஸ் கட்சியும் இதை எதிர்க்கின்றது. தமிழ்மொழிச்சட்ட (விசேஷ) விதிகள் கொண்டுவரப்பட்டபோது எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட இயக்கங்களை நடத்தியதும் பார்லிமெண்டுக்குள்ளே எதிர்த்ததும் தெரிந்ததே. அச்சமயத்தில் பிரதமர் உறுதியுடன் அவற்றைச் சமாளித்து, "வாக்குறுதி கொடுக்கமாட்டேன், கொடுத்தால் அவற்றை

கட்...ள். இந்...நல்ல ஜ... நாயகம் வலுப்பெற வ... காட்டும் இருகட்சி ஆட்... முறை இப்போது த... நாட்டிலும் ஏற்பட்டுள்... தென்று சொல்லலா... இலங்கையிலும் பல கட்... களிருந்தாலும்ஆட்சிஅமை... கும் வாய்ப்பு ஸ்ரீலங்... சுதந்திரக்கட்சி, ஐக்கியதே... யக்கட்சி ஆகிய இரு கட... களுக்கே இருந்துவருகிற... ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்... டன் லங்கா சமசமா... கட்சி, கம்யூனிஸ்ட்க... ஆகிய இருஇடதுசாரிக்க... களும் இணைந்து செயல்... கின்றன.

இதே சமயம் தமிழ் ... கள் மத்தியில் இரு தமி... கட்சிகள் இயங்குகின்ற... இதில் தமிழரசுக்கட்சி... முன்னணியில் நிற்கின்ற... ஆட்சி பீடம் அமைப்பத... போதிய பெரும்பான்மை... பலம் இருபெரும் கட்... ளான ஐக்கியதேசியக்... சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்தி... கட்சிக்கும் 'பற்றுக்குறை... ஏற்படும்போது அவைக... ஒன்று ஆட்சிபீடம்அமை... உதவியளிப்பதன்மூலம் த... ழரின் குறைகளைத்தீர்த்... கொள்ளவும், உரிமைகளை... பாதுகாக்கவும் முடி... மென்ற நம்பிக்கையில் இ... வரை நடந்துவந்துள்ள... தமிழரசுக்கட்சியை ... தமிழ் மக்கள் பெரும்... லும் ஆதரித்துவருவத... தமிழ் மக்களின் நலனை... பாதுகாக்கும்பொறுப்... அவர்களுடையதேயென்... முறையில் தமிழ் மக்கள... மற்றெருகட்சியான தமி... காங்கிரஸ் நடந்துகொ...

### இன்றைய பலன்

17-11-67

வெள்ளிக்கிழமை

கார்த்திகை மாதம் 1-ந் திகதி
நட்சத்திரம்-கார்த்திகை
திதி-பூரணை பகல்10-13 மேல் பிரதமை
சுபநேரம்- 6-08—7-38
ராகுகாலம்- 10-38 12-08

மேஷம்- குடும்பக்கவலை குமைச்சல் அதிகம்
ரிஷபம்- வாக்கு விருத்தி வரவும் திருப்தி
மிதுனம்- அடுத்துக் கெடுப்பர் அவதானம் நன்று
கடகம்- தாய் வழி நலன் மனையலங்காரம்
சிம்மம்- பிள்ளையால் பெருமை பிறர் உதவி
கன்னி- சந்தேகப் பார்வை, சமயோசித புத்தி
துலாம்-இல்லறம்இனிக்கும் இனியவை நடக்கும்
விருச்சிகம்- தோல்வி அணைக்கும் தொல்லைகள் தவிர்
தனுசு- குரு விசுவாசம் குறிக்கோள் நன்று
மகரம்- வியாபார விருத்தி சுவை தரும் நாள்
கும்பம்- தனமும் குணமும் பண்புடன் சேரும்
மீனம்- மறதி மிகுதி வாழ்வில் சோர்வு

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நிருபர்

# ...க்கு அவகாசம் ...டம் நீங்கவில்லை

...காசம் கொடுத்திருக்கிறது.

ஜனவரிக்குள் மாவட்ட சபை மசோதா கொண்டு வரப்படாவிட்டால் அல்லது மிகக் குறைந்த அதிகாரங்களுடைய மசோதாவே கொண்டுவரப்பட்டால் ஜனவரி 31-ந் திகதி கூடும் தமிழரசுக்கட்சியின் பொதுச் சபை 'வெளியேறும்' தீர்மானம் நிறைவேற்றலாம். தீர்மானம் நிறைவேறினுலும் நிறைவேருவிட்டாலும் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், திருகோணமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசா மற்றும் சிலரும் கட்சியிலிருந்து வெளியேறுவார்களென எதிர்பார்க்கலாம்.

## இருகட்சி ஆட்சி

இருகட்சி ஆட்சியே ஜனநாயகம் சிறப்பறுவதற்கும் நி... பறுவத... ம் சிறந்தது. அதாவது பிரிட்டனில் கன்ஸர்வேட்டிவ் கட்சியும் தொழிற்கட்சியுமே ஆட்சி பீடத்துக்கு வருவதற்கு வாய்ப்புள்ளகட்சிகள். அங்கு வேறு கட்சிகளிருப்பினும் கூட்டு ஆட்சிக்கு உதவும் நிலையிலேயே அவை இருக்கின்றனவேயன்றி ஆட்சி அமைக்கும்நிலையி லில் லை. அமெரிக்காவிலும் ஜனநாயகக் கட்சி, குடியரசுக்கட்சி என இருகட்சிகளே ஆட்சி அமைக்கும் நிலையிலுள்ள

# ...கள் நிலையை ...வேண்டும்

கட்... ள். இந்... நல்ல ஜனநாயகம் வலுப்பெற வழி காட்டும் இரு கட்சி ஆட்சி முறை இப்போது தமிழ் நாட்டிலும் ஏற்பட்டுள்ளதென்று சொல்லலாம். இலங்கையிலும் பல கட்சிகளிருந்தாலும்ஆட்சிஅமைக்கும் வாய்ப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக்கட்சி ஆகிய இரு கட்சிகளுக்கே இருந்துவருகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய இருஇடதுசாரிக்கட்சிகளும் இணைந்து செயல்படுகின்றன.

இதே சமயம் தமிழ் மக்கள் மத்தியில் இரு தமிழ்க் கட்சிகள் இயங்குகின்றன. இதில் தமிழரசுக்கட்சியே முன்னணியில் நிற்கின்றது. ஆட்சி பீடம் அமைப்பதற்கு போதிய பெரும்பான்மைப் பலம் இருபெரும் கட்சிகளான ஐக்கியதேசியக்கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் 'பற்ருக்குறை' ஏற்படும்போது அவைகளில் ஒன்று ஆட்சிபீடம்அமைக்க உதவியளிப்பதன்மூலம் தமிழரின் குறைகளைத்தீர்த்துக் கொள்ளவும், உரிமைகளைப் பாதுகாக்கவும் முடியுமென்ற நம்பிக்கையில் இதுவரை நடந்துவந்துள்ளது. தமிழரசுக்கட்சியையே தமிழ் மக்கள் பெரும்பாலும் ஆதரித்துவருவதால் தமிழ் மக்களின் நலனைப் பாதுகாக்கும்பொறுப்பு அவர்களுடையதேயென்ற மு...றயில் தமிழ் மக்களின் மற்ருெருகட்சியான தமிழ்க் காங்கிரஸ் நடந்துகொண்டுள்ளதாகக்கருத இடம் உண்டு.

இந்த இரு தமிழ்க்கட்சிகளும் தாங்கள் இதுவரை பின்பற்றிய கொள்கைகளையும் போக்கையும் ராஜதந்திர முறையையும் நன்கு புனராலோசனை செய்து புதியநோக்கில் திரும்ப வேண்டும். புதிய திட்டமொன்றை அதுவும் தமிழ் மக்கள்அனைவருக்கும்பொதுவான ஒரு திட்டத்தை உருவாக்க முன்வரவேண்டும். ஜனநாயகம் செழிப்புறவும் நிலைபெறவும் இருகட்சி முறை நல்லது. ஆனுல் சிறுபான்மையினரின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கும் இழந்த உரிமைகளைப்பெறுவதற்கும் சிறுபான்மையினருக்கிம் பல கட்சிகள், பல பிரிவுகளிருப்பது நன்மைக்குப் பதில் தீமையையே தரும். தமிழ்த்தலைவர்கள் இனியும் ஒருவர்மீது ஒருவர் பழி சுமத்திக்கொண்டிருப்பது அவர்களுக்கோ, தமிழ் சமுதாயத்துக்கோ நல்லதல்ல.

## மந்திரிசபை மாறுதலா?

ரோம் நகரில் நடந்து கொண்டிருக்கும் ஐ. நா. உணவு விவசாய மகாநாட்டில் கலந்துகொண்டிருந்த உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா பிரதமரின் உத்தரவின்மீது உடனடியாகத் திரும்பியிருக்கிருர். பீக்கிங்சென்ற வர்த்தக அமைச்சரும் அவசரமாகத் திரும்பவிருக்கிருர்.

இவையெல்லாம் விரைவில் மந்திரிசபையில் மாறுதலேற்படவிருப்பதற்கான அறிகுறியா?

---

## பூர்த்தியாகாத நிலையில் சந்தை

வேலணை, வியாழன்

வேலணை வங்களாவடியில் பூர்த்தியடையாத நிலையில் இருக்கும்பொதுச்சந்தையை அமைக்க ஆரம்பித்து சில வருடங்களாகியும், இன்றுவரை பூர்த்தியடையாமல் இருந்துவருகிறது. இக்கட்டிடத்தில் மழைக்குத் தங்கும் ஒரேயொரு வசதியை மட்டும் இப்பகுதி மக்கள் அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இச்சந்தைக் கட்டிடத்தினுல் மக்களுக்கும் கிராமச் சபைக்கும் எதுவித பலனற்றிருக்கும் நிலையைப் போக்க சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டுமென இப்பகுதி மக்கள் கிராமசபையைக் கேட்டுள்ளனர்,




## சிறுவர்தின விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

திருநெல்வேலிமொன்சோரி பாலர் பாடசாலை பெற்றுர்தின இரண்டாம் நிறைவு விழாவும்சர்வதேச சிறுவர் தினவிழாவும் இம்மாதம் 23-ம் திகதிநடைபெறவிருக்கின்றது. திருநெல்வேலி ...ந்துவாலிபர் சங்க மண்டபத்தில் இளைப்பாறிய நீதிபதி திரு, எஸ். தம்பித்துரை தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் வேம்படி மகளிர்கல்லூரி அதிபர் செல்வி. எம். தம்பையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கிருர் [ந.நி.]

---

## தமிழரசுத்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அங்கத்தவர்கள் தெரிவித்தனராம்.

அமைச்சர்திருச்செல்வம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், அ. அமிர்தலிங்கம் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று பிரதமரைப் பேட்டிகாண அமைக்கப்பட்டதென்றும், இக் குழுவில் ஊர்காவற்றுறை எம். பி, திரு. வி. நவரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் ஆகியோரையும் நியமிப்பது பற்றியும் இங்கு ஆராயப்பட்டதாகவும் தெரிகின்றது.

## இ. போ. ச. வுக்கு மகஜர்

வேலணை, வியாழன்,

''எமது பகுதியில் சேவையில் அமர்த்தப்படும் பஸ்கள் தரம்குறைந்தவை. நேரசூசியை சரியான முறையில் பயன்படுத்தப் படுவதில்லை இக் குறை நீங்க எமது பகுதிக்குஒர் பஸ்டிப்போ உடன் திறக்கப்பட வேண்டும்''

என்று கோரும் மஜகர் ஒன்றை இ. போ, ச. தலைவருக்கு தீவுப்பகுதி வாலிப முன்னேற்றச் சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

---

## கல்முனை......

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரியாலயத்தில் கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் திருச்செல்வம், திரு செல்வநாயகம்உட்பட 17 பேர் மட்டும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிகின்றது. மட்டுநகர் எம். பி. திரு. செ. இராசதுரை நேற்று சமூகம் கொடுக்கவில்லை.

கல்முனை இடைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் அடுத்தமாதம் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும், இதற்கான பிரச்சாரக் கூட்டங்களை இங்கு துரிதமாக நடாத்தவேண்டுமெனவும் இங்கு சிலர் தெரிவித்த போதே, இக்கடிதங்கள் பற்றிய பிரச்னைஇங்கு எழுப்பப்பட்டதாம். திரு. மசூர் மௌலானு அண்மையில் கல்முனையில் நடைபெற்ற கலவரம் சம்பந்தமாக எந்தச்சமரச மகாநாட்டையும் கூட்டவோ, இதனை மேலும் ஏற்படாது தடுக்கவோ எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாததால் அவரை தமிழரசுக் கட்சி வேட்பாளராக இங்கு நியமிக்கவேண்டாம் என இக்கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக் காரியால்ய நிர்வாகத்தைப் புனரமைப்புச் செய்யவேண்டுமென தமிழரசு வாலிபமுன்னணியினர் சமர்ப்பித்த வேண்டுகோளும் இங்கு ஆராயப்பட்டதாம். காரியாலய நிர்வாகிகள் சிலரின் ஊழலாலும், கட்டுக்கோப்பற்ற கொள்கையாலும் கட்சிக்கொள்கைகள் சின்னுபின்னமாவதாக இங்கு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதாம். சில பதவிகளுக்கு புதிய நிர்வாகிகளை இங்கு நியமிக்க செயற்குழு ஏகமனதாக முடிவு செய்ததாகவும் நம்பகரமாகத்தெரியவந்துள்ளது.

---

## அறிக்கை........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு வந்திருக்கிருர்' என்று உகத்துக்கத்தினுராம்.

இக்கூற்றை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென இந்த எம்.பியை கட்சிப் பொதுச் செயலாளரும் உள்ளூராட்சி அமைச்சரும் கேட்டதாகவும் இதற்கு அவர் மறுத்ததாகவும் நம்பகரமாகத் தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து இப்படியாக தேவையற்ற வார்த்தைகளை உபயோகிக்கும் உறுப்பினர்கள் மீதும் கட்சியின் அனுமதியின்றி பத்திரிகைகளுக்கு அறிக்கை விடும்கட்சி உறுப்பினர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்களை கட்சியைவிட்டு வெளியேற வேண்டுமெனவும் கட்சிச் செயலாளர் இங்கு பிரேரனை கொண்டு வந்தாராம். [ந.நி]

# நெடுந்தீவு கோட்டை 'டகோபா' அல்ல!
# வெடியரசன் கோட்டை இது

நெடுந்தீவிலுள்ள கோட்டை டகோபாவாக இருக்கலாமென சிலர் கருதுகிறுர்கள். ஆனுல் இந்தக் கோட்டை வெடியரசனின் ஆட்சிபீடமாக இருந்திருக்கிறதென்கிருர் கட்டுரையாளர்.

ஈழநாட்டின் வடகோடியிலே யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் 27 மைல்களுக்கப்பால் வெடியசரசன் கோட்டை என்னும் பெயர் கொண்ட சிறுகுன்று நெடுந்தீவு மேற்குக் கடற்கரையின் பக்கத்தே இருக்கிறது. இதன்பக்கத்தே தோட்ட நிலங்கள் பலவுள. இக் கோட்டை முன்ஞெருகாலத்தில் வெடியரசனுல் ஆளப்பட்டதாம். அவ்வரசனின் அரசாட்சிக்காலத்திலே நாட்டில் கடலரிப்பைத் தடுப்பதற்காக கடற்கரைகளையெல்லாம் வரம்பாக உயர்த்தியதாகவும் கூறப்படுகிறது.

இக்கோட்டையில் இருந்து சிறிது தூரம் தெற்கே ''புகுமுனை'' என்றும் ஓர் இடம் உண்டு. அப் பெயர் இப்போது பூமுனை என்று மருவி வழங்குகின்றது. இவ்விடத்தில் இருந்து சுமார் 25 யார் தூரத்தில் வடக்கே பெரியதுறை என்ற ஒரு துறையும்உண்டு. இவைகள் யாவும் இவ்வரசன் காலத்திலே ஏற்பட்டவை என்றும் புகுமுனை, பெரியதுறை ஆகிய இடங்களிலிருந்தே மரக்கலங்களும் வாணிபமும் நடைபெற்றன என்றும் சொல்லப்படுகிறது.

வெடியரசனுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் ஒவ்வொருவரும் வேலணை, புங்குடுதீவு, நயினுதீவு ஆகிய இடங்களை ஆண்டார்கள்

ஐ. சச்சிதானந்தன்

என்றும் முன்னவர்கள் கூறுகின்றனர். வெடியரசன் இங்கு ஆளும் காலத்தில் அவனிடம் தங்க இரத்தினக் கற்கள் கோட்டையில் இருந்ததாகவும் அதைக் கவர்ந்து செல்வதன் கா... வீகாமன் என்னும் அரசன் மேற்குக் கடற்கரையால் வந்திறங்கினுன் என்றும் அவன் வந்தகாரியம்வெற்றியுடன் திரும்பவேண்டும் என்று ஐயனுரை நினைத்து வழிபட்டான் என்றும் அவ... ...ரெனவும் கூறப்படுகின்றது.

வீகாமன் வந்து வெடியரசனுடன்போரிட்டு வெடியரசனைக் கொன்றதாகவும் வெடியரசனின் மனைவி நீலவேணி அவனது சகோதரர்களுக்கு ஒலை அனுப்பிவிட்டு தானும் கோட்டையினுள் இருந்த கிணற்றுக்குள் வீழ்ந்திறந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனுள்ளே அநேகமான திரவியங்கள் உண்டென்றும், அவற்றைப் பூதம் ஒன்று காவல் புரிந்து கொண்டுவருவதாகவும் இப்போதும் ஒரு கதை வழங்கப்படுகிறது. இத் தீவின் மேற்குப் பகுதியிலேதான் ''கொற்றவை'' அம்மன் ஆலயமும் இருக்கின்றது.

இக் கோட்டையின் பக்கத்தில் உள்ள கல்வேலிகளில் சில கற்கள் சதுரமாக அறுக்கப்பட்ட பெரிய கற்களாக இருக்கின்றன. இன்னும் சில பொருட்கள் தோட்டங்களில் இருந்து எடுத்ததாகவும் கூறப்படுகின்றன இத்தனைசான்றுகளையும்கொண்ட வெடியரசன் கோட்டை எப்படி 'டகோபா''வாகும்? உண்மையை நோக்குமிடத்து வெடியரசன் கோட்டை என்பதே உறுதியாகிறது. ஆகவே புதைபொருளாராய்ச்சியாளர் இவைகளை மனதில் கொண்டு ஆராயவேண்டும்.

## நாடும் நடப்பு...

தலையில்ஒருகடகப்பெ... நெற்றியில் சந்த... பெட்டு. உடலில் ப... லங்கா சேலை. வயது ...துக்கு மேலிருக்கும். பா... க்கு வயது தோற்றவி...

'என்ன தம்பி அந்த... டுக்கு முன்னலை ஆ... கூட்டமாக நிற்கின...?'

'அது ஏதோ கட்சிக்... டம்.'

'கட்சிதான் கட்சி. இ... னெல்லாரும் வெளிக்கி... தானே காலம் இப்... கிடக்குது.'

'ஏனணை ஆச்சி அப்... சொல்ருய்?'

'பின்னையென்னதம்பி... தக் கட்சி, இந்தக்... யெண்டு சொல்லி, ... வெளியிலே கூட்டம்போ... னம், சந்தையிலை நி... பேசினம், சந்திக்குச் ... நின்று பேசினம்.'

'அவையள் பேசத்தா... வேணும். அப்பொ... தானே அவையள் தங்... டைய கொள்கைகளை ... ளுக்கு விளக்கிக்கூறலா...'

'ஓம்ஓம் கொள்கை... கோதாரியும். இந்தக் ... களாலை வீட்டுக்குள்ளை ... ணன் தம்பி சண்டை, ... பன், பிள்ளை கதைக்... தில்லை. இதுதான் இ... யள் செய்யிறவேலை.'

'எணை ஆச்சி. அ... அவையளை ஏனணை கு... சொல்லுவான்.'

'அவையளைச் சொ... மல் வேற ஆரைச் செ... றது. அது போகட்டும்... முட்டை என்னவிலை ... யுமோ?'

'கடகத்துக்குள்ளே... னணை இருக்கு?'

'முட்டைதான். நான்ஊ... குள்ள முட்டைவாங்கி ... கடையளுக்கு, ஒட்டலு... விற்கிறநான். இப்ப ... முட்டை 35சதம். மு... பத்துப்பதினைஞ்சுசதம்கு... துக்கூட வாங்கமாட்ட... அரிசி ஆனைவிலை. எ... சாமானைத்தான் வா... போறியள். எல்லாம் வி... இந்தக் கட்சியளெல்ல... வந்துசெய்த நன்மை ... தான்.'

'அதுக்கு என்னணை ... யிறது. எங்களுக்குமட்டு... உலகம் முழுக்க இந்தக்... டம் தான்.,

'நீ என்ன தம்பி செ... ருய் வெள்ளைக்காரன் இ... கேக்கை இப்படிக் கஷ்... இருந்ததே. இப்பகாசுகு... தாலும்தேவையானசாம... கிடைக்குதில்லை. தடி... காய்ச்சலுக்கு மல்லி அ... சுக் குடிக்க மல்லி கூ... கிடைக்காது. பழையமா... வெள்ளைக்காரன் ஆட்சி... தால் இந்தக் கரைச்சலெ... லாம் இருக்காது.'

அந்த மனுஷிக்கும் எ... கும் வீதிஓரத்தில் நட... சம்பாஷணைதான் இது,

'சுதந்திரம் கொடுத்த... அவர்களுக்கு நாட்... ஆளும் தகுதியில்லை' எ... வெள்ளைக்காரன் சொன்... உண்மைதானு?

—ஊர்சு...

---

## ஜோன்ஸன்—சற்... பேச்சுவார்த்தைக...

வாஷிங்டன், நவ...

ஜப்பானிடம் பொனி... தீவுகளை விரைவிலும், ... னர், ஒக்கினுவா உட்... மற்றும் தீவுகளையும் தி... பிக்கொடுப்பதென அ... ரிக்கா வாக்குறுதியளித்... ளது.

அமெரிக்க ஜனதி... ஜோன்ஸனுடன் ஜப்ப... யப் பிரதமர் சற்ருே ந... திய பேச்சுவார்த்தைக... முடிவில் வெளியிடப்... டுள்ள இணைப்பறிக்... யொன்றில் இவ்வாறு ... குறுதியளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஜி. ஸி. ஈ.

# தமிழ் மொழி

('அ' பாடத் திட்டம்)

வினாக்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:-

(I) நீர் பார்த்த ஒரு திருமண வைபவம்பற்றி விபரிக்குக?

(II) 'உண்மை உயர்வளிக்கும்' என்பதை விளக்கும் கதையொன்று எழுதுக?

(III) 'வீட்டுக்கு ஒரு நூல்நிலையம்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக?

(IV) 'இலங்கையில் காந்திஜி நூற்றாண்டு விழா' எப்படிக் கொண்டாடப்படவேண்டும் என்பதை விளக்கிப் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுக?

(V) 'உயர்தரக் கல்விக்கு ஆங்கிலம் அவசியம்' என்பதற்குச் சாதகமாக அல்லது பாதகமாக உள்ள உமது கருத்துக்களை எழுதுக?

2. பின்வரும் பகுதியை மூன்றிலொன்றாகச் சுருக்கி எழுதுக?

கல்வித் துறையில் பல பயில்வதால் மக்கட்கு உரிமையில் வேட்கையும், உயிர்களிடத்தன்பும் உண்டாகும். உரிமை வேட்கை யில்லாவிடத்தில் உயிர்களிடத்தன்பு நிகழல் அரிது. உரிமைக்கும் அன்புக்கும் பெருந்தொடர்புண்டு. உரிமையில்லா வாழ்வு வாழ்வாகாது. வாழ்விற்கு அழகளிப்பது உரிமை உரிமையே.

உலக சகோதர நேயம் என்பது குறிக்கோள். அதற்குத் தன்னரசு இன்றியமையாதது தன்னரசில்லா நாடு தன்னைக் கெடுத்துக்கொள்வதுடன் பிறரையுங்கெடச்செய்கிறது. அஃதுல் சகோதர நேயத்தை வளர்த்தல் இயலாது?

இலங்கையும் இந்தியாவும் சுயராச்சியம் இழந்த நாடுகள். இவை தங்கள் நலன்களை இழந்துவரல் கண்கூடு. இவைகளையாள்வோருக்குப் பல வழிகளிலும் நலனிருத்தலால், அவர் வலிந்து சுயராச்சியம வழங்க எளிதில் ஒருப்படார் ஆசை எவரை விடும்? பெரிய இரண்டு நாடுகளைப்பற்றி ஒருநாட்டார் ஆட்சி புரிவதைக் காணும் மற்ற நாட்டார்க்கு அழுக்காறெழுதல் இயல்பே. அவ்வசையும் இவ்வழுக்காறும் வாளா கிடக்குமோ? விரிவுரை வேண்டுவதில்லை.

இவ்வளவிற்குங் காரணமாயிருப்பது எது? இரண்டு நாடுகளும் சுயராச்சியமிழந்து நிற்பதேயாகும். உலக சமாதானத்துக்கே கேடு விளைத்து வருவோர் இலங்கையரும் இந்தியருமென்று இங்கே கூறல் மிகையாகாது. ஆகவே இரு நாட்டாரும் விடுதலை பெறுதற்குரிய முயற்சி செய்யக்கடமைப்பட்டிருக்கிறார். உலகில் சில நாடுகள் உரிமையிழந்து கிடக்கும்வரை உலக சகோதர நேயத்துக்கு இடனில்லை என்பது பெரிதுங் கருதற்பாலது. தன்னரசு பெறுதற்கு இதுகாறும் உலகில்கொள்ளப்பட்ட முறையை இனி எவருங் கொள்ளுதலாகாது. எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யா அருள்முறையே இனி கொள்ளப்படல்வேண்டும். நெப்போலியன், கெய்ஸர் கொண்ட கொலைமுறை இனிவேண்டாம். காந்தியடிகள் அறிவுறுத்தும் அறமுறையே இனிவேண்டும். மாணாக்கர்கள் அம்முறையில் பயிற்சிபெறுவார்களாக.

3. கீழ்வரும் பாடல்களைப் படித்தபின் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக!

குந்தி கன்னனிடம் இரு வரங்கள் பெற்றுக்கொண்டபின் நிகழ்வதைக் கூறுவன இப்பாடல்கள்.

(i) பெருவர மிரண்டும் பெற்றபின் தன்னைப்
பெற்ற தாயினைக் கரங் குவித்து
தருவரம் எனக்கும் இரண்டுள உலகில்
சராசரங் களுக்கெலாம் தாயீர்
வெருவரும் அமரில் பார்த்தனால் அடியேன்
வீழ்ந்த போதவனிபர் அறிய
மருவரு முலைப்பா லெனக்களித்து உம்தம்
மகனெனும் வாய்மையும் உரைப்பீர்.

(ii) உய்வருந் திறல்வெம் போர்முடிப் பளவும்
உமக்கு நான் மகனெனுந் தன்மை
ஐவரு மறியா வண்ணம்நீர் காப்பீர்
அல்லது அங்கவர் சிறிதறியின்
மைவருங் கடற்பார் அனைத்தையும் எனக்கே
வழங்குவர் வழங்கினல் யான் என்
கைவருந் துணைவன் தனக்கலால் வழங்கேன்
கடைப்பிடி கருமம் ஈது என்றான்.

(iii) என்றலும் அதுகேட்டு ஈன்றதாய் ஒக்கும்
என்று கொண் டிவ்வரம் நேர்ந்து
வன்றுயர் மேன்மேல் வரவயான் தளரா
வகையுயிர் உனக்குமுன் பெயர்வது
என்று இனி எனத்தன் கண்கள்நீர் சொரிய
இனைந்து நைந்து அழுதழுது இரங்கி
என்று அருள் மதலைதனைத் தழீஇ நிறுத்தி
யாதவன் இருந்துழிச் சென்றாள்.

(iv) கண்ணனும் குந்தி கன்னனோ டுரைத்த
கருத்தெலாந் திருத்தமாக் கேட்டு ஆங்கு
எண்ணமும் முடிந்தது எனமகிழ்ந் தந்த
அணங்கையும் இவ்விடை இருத்தி
தண்ணளியுடன தன்பின வருநிருபர்
தம்மையும் முறைமுறை நிறுத்தி
பண்ணமை கடந்தேர் மீதுகொண் டன்றே
பாண்டவர் உறைநகர் அடைந்தான்.

(அ) 'தருவரம் எனக்கும் இரண்டுள' என்று கன்னன் கேட்ட வரங்கள் எவை?

(ஆ) கன்னன் துரியோதனன் மேல் கொண்ட நட்பின் பெருமையை விளக்கும் பகுதியை எழுதுக.

(இ) மூன்றாவது பாடலில் நீர் காணும் உணர்ச்சியை விளக்குக.

(ஈ) பன்மைப் படர்க்கை வினைமுற்று, பன்மைப் படர்க்கைப் பெயர், அளபெடை இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

கீறிட்ட சொற்களிலுள்ள பெயர்ச் சொற்கள் ஏற்ற வேற்றுமையையும் உருபுகளையும் எழுதுக.

(உ) அவனிபர், அமர், அளித்து, வாய்மை, தண்ணளி, நைந்து இவை தரும் பொருள்கொண்ட வேறு ஒவ்வொரு சொல் எழுதுக.

4. பின்வருஞ் சொற்களின பொருள் விளங்க அவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுதுக.
பாராட்டு, பரிசோதனை, முதிர்ச்சி, உதிர்ந்த, தூய்மை முறைகேடு, தூரிகை, விளித்து, சிறுபான்மை, செயற்கை.

5. கீழ்வருஞ் சொற்றொடர்கள் குறிக்கும் உண்மைப் பொருளை விளக்குக.
பகற்கனவு, சூரியனைக் கண்ட பனி, ஏட்டுச்சுரைக் காய், கண் வளர்தல், இளிச்சவாயன்.

## இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

குரும்பசிட்டி, வியா

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். விக்னேஸ்வரமூர்த்தி அடுத்த வருடம் தை மாதம் முதல் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். இவருடைய தற்போதைய ஸ்தானத்திற்கு கொழும்புப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. கே. ராஜசுந்தரம் கடமையாற்றுவார்.

## கூட்டுஸ்தாபனம்

கொம்பனித்தெரு, வியா.

இலங்கையில் ஒரு தேசிய கப்பல் கூட்டுஸ்தாபனம் ஒன்று நிறுவுவது பற்றி அமைச்சர் குழு பரிசீலனை செய்து வருவதாகவும். ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் இருவர் இலங்கையில் ஒரு தேசிய கப்பல் கூட்டுஸ்தாபனம் அமைப்பது பற்றி பரிசீலனை செய்து அமைச்சர் குழுவுக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. வர்த்தகஅமைச்சு கூறிய ஆலோசனையின் படி இது நடைபெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

## கலைக்கதம்ப விழா

புன்னாலைக்கட்டுவன், வியா.

வலி. கிழக்கு ஆசிரியர் சங்க வருடாந்தக் கலைக்கதம்ப விழா இம்மாதம் 21-ம் திகதி புத்தூரில் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

சோமஸ்கந்தக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. எஸ். குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ் விழாவில் நாட்டுக் கூத்துகளும் இடம் பெறுமெனத் தெரிகிறது.

## வித்தியாதிபதிக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கானையிலுள்ள சிவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது அவ்வூரிலுள்ள ஆசிரியர்களை பதிலாக நியமிக்கும்படி சங்கானைப் பட்டினசபைத் தலைவர் வட பகுதி வித்தியாதிபதிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளார்.

## 'மின்மினி' வெளிச்சம்பற்றி அமைச்சருக்கு மகஜர்

மானிப்பாய், வியா.

மின்சார வசதி அமைக்கப்பட்டும் தக்க வெளிச்சத்தைப் பெறவோ, வேறும் மின்சாரத்தில் இயங்கும் கருவிகளை உபயோகிக்கவோ இயலாது சில ஆண்டுகளாக கஷ்டமடைந்து வரும் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த மக்கள் பலர் ஒருமுகமாகத் தமது நீண்டநாட்குறைகளை உள்ளூராட்சி அமைச்சருக்கு எழுத்து மூலம் முறையிட்டிருக்கிறார்கள். அவர்களது மின்சாரக் குறைபாட்டிற்கு அப்பகுதியிலுள்ள காங்கேசன்துறை வீதியிலிருந்து கலட்டி ஒழுங்கைக்குப் பொருத்தப்பட்ட மின்சாரக்கம்பிகளே காரணம் என்று கூறப்படுகிறது. 1940-ம் ஆண்டு வீசிய புயற்காற்றினால் மின்சார இணைப்புகள் சேதமடைந்ததால் அன்று அங்கு தற்காலிகமாகப் பொருத்தப்பட்ட மின்சாரக்கம்பிகள் இன்றும் மாற்றப்படாதபடியால் பழுதடைந்த அக்கம்பிகள் மின்சக்தி வீணாகிப்போக ஏதுவாயிருக்கின்றன, என்று தெரிகிறது. இதனாலே தான் இத்தனைகாலமும் அப்பகுதி இரவில் 'மின்மினி' வெளிச்சத்தில் தூங்கிவருகின்றதாம்.

## பஸ் சேவை சீர்கேடு

யாழ்ப்பாணம். வெள்ளி

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பஸ் சேவை சீர்கேடான நிலையிலுள்ளது.

இல. 779 பஸ் சேவை சீர்கேட்டால் நாரந்தனை, கரம்பன் மக்கள் பல மைல் தூரம் நடந்துசென்று வேறு பஸ்களில் அல்லது தனிப்பட்டவர்களின் வாகனத்தில் செல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இரவு 7-30 மணிக்கு பின் 779 இலக்க பஸ் சேவை இல்லாததால் நாரந்தனை கரம்பன் மக்கள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள்.

## ஆசிரியர் இடமாற்றம்

சுழிபுரம், வியா.

இங்கு நடைபெற்ற வடமாகாண ஆசிரிய சங்க நிர்வாகிகள், மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கூட்டத்தில் ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக ஆராயப்பட்டது. திட்டமிடப்படாத ஆசிரியர் இடமாற்றத்தை வன்மையாக கண்டிப்பது ... நடவடிக்கை எடுப்பதாகவும் ஈற்றில் தீர்மானிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கொன்வென்ற் திறமையாக ஆடி சாம்பியனாகியது

## விறுவிறுப்பான வலைப்பந்தாட்ட மோதல்

— நமது நிருபர் எம். எஸ். துரைராசா —

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ் மாவட்ட மகளிர் கல்லூரி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் கொன்வென்ற் மகளிர் கல்லூரி மைதானத்தில் கொன்வென்ற் மகளிர் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் ஸ்ரார் கழக கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மேற்கரிவுக்கான சாம்பியன் வலைப்பந்தாட்ட மோதலில் கொன்வென்ற் வெற்றியீட்டி சாம்பியன் கேடயத்தைத் தட்டிக்கொண்டது

### சபாஷ்

இப்போட்டியின் ஆரம்பக் கட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. கொன்வென்ற் கோஷ்டியின் வெற்றிக்கு உயிர்நாடியாக விளங்கிய செல்வி. எலிசபத் அன்றுவின் திறமையான விளையாட்டுக்கு சபாஷ் போடலாம்.

பம்பரவேகத்தில் பந்தை 'பாஸ்' செய்து எதிர்க் கோஷ்டியைத் திணறடித்துக்கொண்டிருந்தார். இவர் துள்ளிப்பாய்ந்து பந்தைப் பிடிக்கும் கட்டங்களில் ரசிகர்கள் 'அப்ளாஸ்' போடத் தவறவில்லை இவருக்குப் பக்கபலமாக செல்விகள, லூசியா மரியாம்பிள்ளை புளோறன்ஸ் தேவநாயகம் ஆகிய வீராங்கனைகள் மின்னல் வேகத்தில் பந்தை வீசிக்கொண்டிருந்தனர்.

கொன்வன் கோஷ்டியின் கடும்மோதலுக்கு ஸ்ரார் கழக வீராங்கனைகள் விட்டுக்கொடுக்கவில்லை. சந்தர்ப்பங்களை பயன் படுத்தி வலைக்குள் பந்தை விழுத்திக் கொண்டேயிருந்தனர். இவர்களின் வலைக்குள் விழுத்துங் கட்டங்கள் அருமையிலும் அருமை. செல்விகள் லீன்மோசேஸ் காப்டன் மேரிகதிர்காமர் ஆகியோர் அடுக்கடுக்காக வலையில் பந்தைப்போட்டு இடைவேளையின்போது கொன்வன்ற் 6 புள்ளிகள் பெற்றிருக்கத் தக்கதாக ஸ்ரார் கழகம் 7 புள்ளிகளைப் பெற்றிருந்தது

### பரபரப்பு

இடைவேளைக்குப் பின்னர் இருகோஷ்டிகளின் பலப் பரீட்சை ரசிகர்களைப் பரபரப்பில் ஆழ்த்தியது. எதிர்பாராத இம்மோதலில் இரு கோஷ்டியினரும் வலைக்குள் பந்தை சரமாரியாக பொழிந்தனர். உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் ஆடிக் கொண்டிருந்த எலிசபத் அன்று மின்னல் வேகத்தில் காப்டன் சரோஜா கண்ணுத்துரையிடம் பந்தைப் பாசிங் செய்ய சரோஜா துரிதமாக துள்ளிப்பாய்ந்து புள்ளிகள் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டிருந்தார். இதற்கு றூசியாவும் பக்கபலமாகக் காணப்பட்டார்.

ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் பாராட்டக்கூடிய வகையில் ஸ்ரார் கோஷ்டி மோதிய போதிலும் இக் கோஷ்டியின் முக்கிய ஆட்டக்காரரும் உலகப்பிரசித்தி பெற்ற இலங்கைக் கோஷ்டியின் வலைப்பந்தாட்ட வீராங்கனை செல்வி பிரான்சிஸ் ரர் செகராசசிங்கி எதிர்பாராத விதமாக இப்போட்டியில் கலந்து கொள்ளாமை ரசிகர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை அளித்தது.

கொன்வென்ற் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி முடிவில் கொன்வென்ற் கோஷ்டி 15 - 12 புள்ளிகளால் ஸ்ரார் கழகத்தை வென்றது.

இப்போங்டி முடிவில் இச் சுற்றுப்போட்டியின் 14 வயதுக்குக் கீழ்ப்பட்டோரின் போட்டியில் சாம்பியன்களான வேம்படி மகளிர் கோஷ்டிக்கும் பிரிவுச் சாம்பியனுன கொன்வென்ற் கோஷ்டிக்கும் கீழ்ப்பிரிவில் சாம்பியனுன உடுவில் மகளிர் கோஷ்டிக்கும் மேற்பிரிவில் பிரிவுச் சாம்பியனுன கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் றெவறன் மதர் கிளேயரினல் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# செ. பற்றிக்ஸிடம் இருபிரிவிலும் யாழ்ப்பாணக்கல்லூரி தோல்வி

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சினேகிதபூர்வமான 1-ம், 2-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் இரு பிரிவுகளிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரியை அமோக வெற்றியீட்டியது.

முதலாம் பிரிவில் இரு கோஷ்டிகளுக்குமிடையே நடைபெற்ற போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ரசிப்பாகவிருந்தது. சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்களான பிரான்சிஸ், நவப்ராசா ஆகிய வீரர்கள் அனேகமான கோலடிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தனர் அவர்கள் மேலும் துரிதமாக ஆடி பிரான்சிஸ் 2 கோல்களையும் நவப்ராசா ஒரு கோலையும் அருமையாகப்போட்டனர். இடைவேளையின் போது எதிர்க்கோஷ்டி ஒரு கோலும் போடாதிருக்க சென். பற்றிக்ஸ் கோஷ்டி 3 கோல்கள் பெற்றிருந்தது. இடைவேளையின் பின் சென்பற்றிக்ஸ்கோஷ்டியின் மின்னல்வேக ஆட்டக்காரர்களான வெற்றிவேலு கனகநாயகம் ஆகிய வீரர்கள் மேலும் கோல்களை விளாசினர். எனினும் போட்டி முடியும் தறுவாயில் யாழ்ப்பாணக் கோஷ்டி வீரனுன சண்முகம் வெற்றிகரமாக ஒரு கோலைப்போட்டார்.

இப்போட்டி முடிவில் சென். பற்றிக்ஸ் 5—1 கோல்களால் யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

2-ம் பிரிவு ஆட்டம் முதலில் போர் அடித்துக்காணப்பட்டாலும் இடைவேளைக்குப் பின் பலமான மோதல் என்றே சொல்லலாம். இடைவேளைக்கு முன் யாழ்ப்பாணக் கோஷ்டி விட்டுக்கொடுத்ததால் ஆட்டம் 'சப்' என்று இருந்தது. இடைவேளையின் போது யாழ்ப்பாணக் கோஷ்டி ஒரு கோலும் பெருதிருக்க சென்பற்றிக்ஸ் 3 கோல்களைப் பெற்றிருந்தது. எனினும் இடைவேளைக்குப் பின் வட்டுக்கோட்டை ஒரு புது உற்சாகத்துடன் பலமாக மோதி ஒரு பெரும் பலப்பரீட்சையில் இறங்கியது. சென். பற்றிக்ஸ் சாதுரியமாக சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மேலும் இரண்டு கோல்களைப் பெற்றது யாழ்ப்

[8-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி வலிகாமம் வடக்கு கூட்டு உதைபந்தாட்ட கோஷ்டியும் கண்டி உதைபந்தாட்டக் கோஷ்டியும் இன்று மாலை சுன்னுகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிமைதானத்தில் மோதிக்கொள்ளவிருக்கின்றன.

ஏற்கனவே வலிகாமம் வடக்கு கூட்டுக் கோஷ்டி கொழும்பு ஸாகிரா கல்லூரியுடன் ஆடிய ஓர் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. வடமாகாண இ. போ. ச.வுடன் நடந்த மோதலில்4-3 கோல்களால்வெற்றிபெற்றது வலிகாமம்வடக்குக்கோஷ்டியின் காப்டன், முன்னுள் சுன்னுகம ஸ்கந்தவரோதயா உதைபந்தாட்டக் கோஷ்டியின் காப்டனுக இருநத மணிராசா ஆவார். [வி.நி.]

## சாம்பியன் போட்டியை மகாஜனு பகிஷ்கரித்தது

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் தெல்லிப்பளை மகாஜனு கல்லூரிக்கும், அருணோதயா கல்லூரிக்கும் இடையே நடைபெறவிருந்த 2-ம்பிரிவு சாம்பியன் உதைபந்தாட்டப் போட்டியை மகாஜனு கோஷ்டி பகிஷ்கரித்தது.

இப்போட்டிக்கு இரு கோஷ்டிகளும் வந்து போட்டிக்குத் தம்மைத் தயார் செய்துகொண்டிருக்கும் போது மத்தியஸ்தர் பிரச்னையில் மகாஜனு போட்டியைப் பகிஷ்கரித்ததாகத் தெரியவருகிறது. கடமையாற்றச் சென்ற மத்தியஸ்தர் தமக்குமாருக கடமையில்ஈடுபடலாம் என்பதாலேயே மகாஜனு கோஷ்டி கடமையில் ஈடுபட வந்த மத்தியஸ்தரை நிராகரித்து ஆட்டத்தில் ஈடுபடாமல் மைதானத்தை விட்டு வெளியேறியதாக அங்கு கூறப்பட்டது.

[வி நி.]

## வெற்றி தோல்வி இல்லை

உடுவில், வியாழன் இணுவில் விவசாயிகள் கழகத்துக்கும் தாவடி மேற்கு தெரிவுக் கோஷ்டிக்கும் இடையே நேற்று மாலை இணுவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் இருதரப்புக் கோஷ்டியினரும் தலா 3-3 கோல்களைப்பெற்றுக்கொண்டதனுல் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இணுவில் வலிகாமம்... போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

# தமிழ் மொழி

### விடைகள்

3 (அ) 'தாயீர்! அச்சந்தருக்போரில் அர்ச்சுனனுல் அடியனேன் தாக்கப்பட்டு விழும்போது அரசர்கள் எல்லோரும் அறியத்தக்கதாக எனக்கு முலைப்பால் அளித்து நான் உங்கள் மகன் என்ற உண்மையையும் செல்லுவீர்களாக' என்பதுமுதலாவது வரம்.

இரண்டாவது, 'கொடிய போர் முடியுமளவும் நான் உங்கள் மகன் என்ற தன்மையைப் பாண்டவர்கள் ஐவரும் அறியாவண்ணம் காப்பீர்களாக' என்பதாகும்.

(ஆ) குந்தியிடம் கன்னன் இரண்டாவது வரத்தைக் கேட்கும்போது தாயே! நான் உங்கள் மகன் என்பதைப் போர் முடியும்வரையும் பாண்டவர்கள் ஐவரும் அறியா வண்ணம் மனத்துள் வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் அறிந்தால் தங்களரசாட்சி முழுவதையும் எனக்களித்து விடுவர். அவ்வாறெனக்களிக்கும் அரசை நான் ஆளமாட்டேன. என் நண்பனுன துரியோதனனுக்கே கொடுப்பேன் என்று கூறுகிறுன். 'யான் என் கை வரும் துணைவன் தனக்கலால் வழங்கேன்' என்று வரும் பகுதி கன்னன் துரியோதனன் மேல் கொண்ட நட்பின் பெருமையை விளக்குகின்றது.

(இ) கன்னனும் இரு வரங்கள் தாயிடம் கேட்கிறுன். 'வேண்டியது தான்' என்று அன்னை குந்தியும் அவற்றை அளிக்கிருள். பெற்ற பாசம் அவளை வருத்துகிறது. 'நான் விழ்ந்துவிட்டால்' என்று கன்னன் சொல்லியதுஅவள் உள்ளத்துள் புகுந்து அவன் இறந்துவிடுவான் என்ற எண்ணத்தை எழுப்பி மேலும் மேலும் வருத்துகிறது ஐயோ! நான் இதனை எண்ணி எண்ணி வருந்திக்கொண்டிராமல உயிர் போகப் பெறுவேனே; அவ்வாறு உயிர் போகப் பெறுவது தான் இனி நடக்குமா? என்றெல்லாம் தனக்குள்ளேயே நினைத்து வருந்துகிருள். உணர்ச்சிப் பெருக்கால் அவள் கண்கள் நீர் சொரிகின்றன. அவள் படும் துன்பத்தை கண்கள் நீர் சொரிய, இனைந்து, நைந்து, அழுது, அழுது, இரங்கி என்று தொடர்ந்து கவி கூறுகின்றுர் குந்தியின் துன்ப உணர்வைப் புலப்படுத்துகின்றது இப்பாடல்.

(ஈ) பன்மைப் படர்க்கை வினைமுற்று — வழங்குவர்.
பன்மைப் படர்க்கைப் பெயர் — அவர்.
அளபெடை —தழீஇ.
பெயர்ச்சொற்கள் ஏற்ற வேற்றுமை.
தன்னை — இரண்டாம் வேற்றுமை 'ஐ' உருபு.
உமக்கு — நான்காம் வேற்றுமை 'கு' உருபு.
இல்லிடை — ஏழாம் வேற்றுமை 'இடை' உருபு.

(உ) ஒத்த பொருளுள்ள வேறு சொற்கள்.

| | | |
|---|---|---|
| அவனிபர் | — | அரசர் |
| அமர் | — | போர் |
| அளித்து | — | கொடுத்து |
| வாய்மை | — | உண்மை |
| தண்ணளி | — | இரக்கம் |
| நைந்து | — | வருந்தி |

4 பாராட்டு: சேவை நலம் பாராட்டு விழாவில் ஆசிரியரின் நீண்ட காலச் சேவையைப் புகழ்ந்து பலர் பேசினர்.

பரிசோதனை: ஜலவாயுக் குண்டுப் பரிசோதனைகளால் ஆகாயத்தை நஞ்சாக்காதீர்கள் என்று வல்லரசுகளுக்கு ராஜாஜி வேண்டுகோள் விடுத்தார்.

முதிர்ச்சி: வயது முதிர்ச்சியடைந்து கோலூன்றித் தள்ளாடிச் செல்லும் கிழவரைக் கண்டதும் சித்தார்த்தன் மனம் முதுமையைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியது.

உதிர்ந்த: கன்னனை நோக்கி உதிர்ந்த முத்துக்களை நான் கோக்கவா அல்லது பொறுக்கவா என்று துரியோதனன் கேட்டான்.

தூய்மை: இளம் உள்ளங்கள் தூய்மையான வெள்ளையுள்ளங்களாகும். அவற்றில் சூழலால் வரும் மாசு படியாமல் காப்பது பெற்றோர் கடமையாகும்

முன்னேடி: கடல் வாணிபத்தின் முன்னேடியாக விளங்கிய பிரித்தானியா இரண்டாம் உலகப்பெரும் போருடன் தன் வாணிபப் பெருமையை இழந்து விட்டது.

தூரிகை: ஓவியன் தூரிகையை வர்ணத்தில் தோய்த்து வண்ணச் சித்திரங்கள் வரைகின்றுன். எழுத்தாளன் பேனவில் மைகொண்டு எழுத்தோவியங்களைப் படைக்கின்றுன்.

விளித்து: வாவும் இளமான்களே! மயில்களே! மடப்பிடிகளே! என்று விளித்து தன்னை விட்டுப்போன நளன் சென்ற வழியைக் காட்டுமாறு தமயந்தி கேட்டாள்.

சிறுபான்மை: சிறுபான்மை இனத்தைப் பெரும்பான்மை இனம் அடக்கி ஆள்வதுதான் ஜனநாயகம் என்றுல் அந்த ஜனநாயகமே எமக்கு வேண்டாம் என்று ஒரு தலைவர் பேசினுர்.

செயற்கை: இயற்கை அழகுடன் செயற்கை அழகும் சிறந்து விளங்கும் ... முன்னைய அரசர்களில் ... ஆக இருந்தது.

5. சொற்றொடர்களின் உண்மைப்பொருள்.

பகற்கனவு — செய்துமுடிக்க முடியாத ஒன்றை முடிப்பதாக எண்ணுதல்.

சூரியனைக் கண்ட பனி — உடனேயே அற்றுப் போய் விடுதல்.

ஏட்டுச் சுரக்காய் —வாழ்க்கையில் எவ்வகையிலும் உதவ முடியாத கல்வி.

கண்வளர்தல் — நித்திரை செய்தல்.

இளிச்சவாயன் — அறிவில்லாதவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைத் துறைமுகத்தில் வேலைகள் துரிதம்

திருகோணமலை, வியாழன் திருகோணமலை துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டு துறைமுகச் (சரக்கு) கூட்டுஸ்தாபனம் இத்துறைமுகத்தின் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளைக் கவனிக்கத்தொடங்கிய பின்பு வேலைகள் யாவும் துரிதமாக நடைபெறுகின்றன. வேலைகளை இன்னும் விரைவாக செய்துமுடிப்பதற்கு போதியளவு வத்தைகள் இல்லாதது பெருங்குறையாக இருக்கின்றது. தற்போது இவர்கள் வேலைக்கென 30 வத்தைகள் மட்டுமே பாவனைக்கு இருக்கின்றன. இவற்றிலே உருக்காலான 10 பெரும் வத்தைகளை சீமெந்து, அரிசி போன்றவற்றை இறக்குமதி செய்வதற்காக தற்போது உபயோகிப்பதனால் எஞ்சியுள்ள 20 வத்தைகள் மட்டுமே தேயிலை ஏற்றுமதிக்கென பாவிக்கப்படுகின்றன. அதிக கப்பல்கள் இத்துறைமுகத்தில் இருந்து தேயிலை ஏற்றுமதியாக்கிச் செல்ல வரவிருப்பதனால் உடனடியாக இன்னும் 30 பெரும் வத்தைகளை வாங்கவிருக்கிறது.

# ராதா பிணையில் செல்ல அனுமதி

சென்னை, நவ. 16 சினிமா நடிகர் எம். ஆர். ராதா ஏழு நிபந்தனைகளுடன் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவ வழக்கில் தனக்கு சென்னை செஷன்ஸ் நீதிமன்றம் விதித்த 7 வருடகாலச் சிறைத் தண்டனையை ஆட்சேபித்து அப்பீல் செய்திருந்தார் ராதா. அதனை ஏற்றுக் கொண்ட நீதியரசர்ரெட்டி பத்தாயிரம் ரூபா சொந்தப் பிணையில் இரண்டுபேரின் பிணையுடன் செல்ல நீதியரசர் அனுமதித்தார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. கோகுல கிருஷ்ணன் நான்கு காரணங்களைச் சமர்ப்பித்து, ராதாவை பிணையில்விட அனுமதிக்கக்கூடாதென ஆட்சேபம் தெரிவித்தார்.

குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பதாலும், அவர் தற்கொலை செய்து கொள்ளலாமென்றும், தண்டனைக்காக வேறு ஏதாவதுசெய்து கொள்ளலாமென்றும், எம். ஜி. ஆரைக் கொலைசெய்யலாமென்றும் முடிக்குரிய வழக்கறிஞர் நான்கு காரணங்களைக் காட்டினார்.

அப்பீல் விசாரணை முடியும்வரை நடிகர் ராதா திருச்சி நகரசபை எல்லைக்குள்ளேயே தங்கவேண்டுமெனவும், வாரத்தில் ஒரு நாள் மாலை 6 மணிக்கு பாலக்கரை பொலிஸ் நிலையத்துக்கு நேரடியாக சமுகமளிக்க வேண்டுமெனவும், எந்தவிதமான பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொள்ளக்கூடாதெனவும் நீதியரசர் உத்தரவிட்டார்.

# 'அடித்துவிட்டு லொறி நிற்காமல் சென்றது'

யாழ்ப்பாணம், வெள்ளி "நாவாந்துறை மார்க்கட்டை நோக்கி நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். அப்பொழுது எதிரே வேகமாக வந்துகொண்டிருந்த லொறி எனக்கு முன்னால் சைக்கிளை உருட்டிச் சென்ற யோகராசாவை அடித்துவிட்டு, நிற்காமல் சென்றது. அங்கு நின்றவர்கள் சத்தம்போட்டும் லொறி நிற்கவில்லை. இச்சம்பவத்தின்போது எங்களுக்குக் காயம் ஏற்பட்டது."

நாவாந்துறையில் நேற்று நடைபெற்ற லொறி விபத்தில் மரணமான கதிரவேலு யோகராசா என்ற 19வயது வாலிபரின் மரணவிசாரணையின்போது தம்பிராசா இருதயநாதன் என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்திரேட் திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தியபோது, லொறிசாரதி லொறியை பொலிஸ் நிலையத்திற்கு ஓட்டிச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

லொறி சாரதியின் கவலையீனத்தினால்தான் மரணம் ஏற்பட்டதெனக்கூறிய உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்திரேட் சாரதியான சிவசம்பு கந்தசாமி என்பவரை 1000 ரூபா பிணையில் செல்லுமாறும், இம்மாதம் 25ம் தேதி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## ரூ. 100 அபராதம்

வல்வெட்டித்துறை, வியா. கரவெட்டியைச் சேர்ந்த சின்னையா பாலசிங்கம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி குலசிங்கம் என்பவருடைய கடலைத் தோட்டத்தை டிராக்டர் வண்டி கொண்டு உழுது சேதப்படுத்தியதாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு நூறுரூபா அபராதம் விதித்தார்.

## சாதாரண வேக..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணை நடத்தினர்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை செய்தார். கான்ஸ்டபிள் துரைசிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

தொடர்ந்து விசாரணை நடத்தும்படியும், விசாரணையைக் கோர்ட்டிற்கு அறிவிக்கும்படியும் உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்திரேட் தெரிவித்தார்.

விபத்தின்போது பஸ்ஸை செலுத்திச் சென்ற சிங்காரவடிவு என்பவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 3-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

சென்னையில்

# மாணவிகள் மீது காகித அம்பு வீச்சு!

## சம்பவத்தைத் தொடர்ந்து கல்வி மந்திரியின் சமரசம்

சென்னை, நவ. 16 சென்னையிலுள்ள கல்லூரிகள் இரண்டு நேற்று வகுப்புகளைப் பகிஷ்காரம் செய்தன.

கடந்த 3 தினங்களாக விவேகானந்தாக் கல்லூரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது கடந்த ஞாயிறன்று பல்கலைக்கழக மண்டபத்தில் நடந்த ஒரு சம்பவமொன்றின் எதிரொலியே இந்த வேலை நிறுத்தமாகும் இன்று ஜெயின் கல்லூரியும் அனுதாப வேலைநிறுத்தம் செய்தது.

பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற நன்கொடைக்காட்சி யொன்றின் போது ஆண் மாணவர்கள் பெண் மாணவிகள் மீது காகித அம்புகள் வீசியதாகவும் விவேகானந்தாக் கல்லூரி மாணவர் ஒருவர் குறுக்கிட்ட போது அவரைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் அடித்ததாகவும் கூறப்படுகிறது.

### கல்விமந்திரி விரைந்தார்

இன்று தமிழகக் கல்விமந்திரி திரு இரா. நெடுஞ்செழியன் விவேகானந்தக் கல்லூரிக்கு விரைந்து சென்று பகிஷ்கரிப்பு இயக்கத்தை கைவிடுமாறு மாணவர்களை கேட்டுக் கொண்டார் ஆயிரத்துக்குமதிகமான மாணவர்கள் கல்விமந்திரியின் பேச்சைக் கேட்டனர்.

விவேகானந்தக் கல்லூரி மாணவர்களிடம் மன்னிப்புக்கோரிப் பல்கலைக்கழக வரவேற்புக் கமிட்டித் தலைவரும் பச்சையப்பன் கல்லூரி மாணவர்சங்கத் தலைவரும் எழுதி யனுப்பியுள்ள கடிதங்களை மந்திரி மாணவர்களுக்கு வாசித்துக் காட்டினார்.

### வேலைநிறுத்தம் வாபஸ்

கடிதங்களின் நல்நோக்கத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு விவேகானந்தக் கல்லூரி மாணவர்கள் தமது வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்றனர்.

### விசாரணை

கடந்த ஞாயிறு நடந்த சம்பவத்தையிட்டுத் தமது அமைச்சு ஒருவிசாரணையை நடத்துமென்றும் கல்வி மந்திரி மாணவர்களுக்கு உறுதியளித்தார்.

# 'டைனமைட் வைத்து மீன் பிடித்தார்களாம்'

## மூவர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி டைனமைட் வைத்து மீன் பிடித்தனரென்ற சந்தேகத்தின்பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கரையூர்க் கடலில் இச்சம்பவம் நேற்று அதிகாலை நடைபெற்றது. கரையூர்ப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றைத் தொடர்ந்து பொலிஸ் கான்ஸ்டபிள் இரத்தினம், ரத்நாயக்கா ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இவர்களைக் கடலில் வைத்து டைனமைட்டுடன் கைதுசெய்தனராம்.

கைதுசெய்யப்பட்ட யேசுதாசன், செல்லத்தம்பி, புஷ்பராஜா ஆகிய மூவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். ந. நி

## நாவலர் விழா

கொம்பனித்தெரு, வியா: கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தினர் நாவலர் விழாவை இம்முறை கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் கொண்டாட இருக்கின்றனர்.

நாவலர் விழாவில் நாவலர் கட்டுரைப் போட்டியொன்றும் நடாத்தப்படும் என்றும் அதில் முதலாவதாக வருவோருக்கு தங்கப் பதக்கம் ஒன்று பரிசளிக்கப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென். பற்றிஸிடம்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

பாணக் கோஷ்டியும் அதிர் அடியினால் ஒரு கோல் பெற்றது. இப்போட்டி முடிவிலும் சென். பற்றிக்ஸ் 5—1 கோல்களால் யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. ஜே. மகல்ராசா, திரு. சண்முக [illegible] யாற்றினர். (வி. நி)

## சோம்பேறிகளும் பங்கு கொள்ளவேண்டும்

உடுப்பிட்டி வியாழன் சிரமதானம் மூலம் களை பிடுங்கும்இயக்கத்தை ஆரம்பித்ததினால் ஏழை விவசாயிகள் பெரும் பயனடைந்துள்ளனர் நெல் வயல்களில் பிள்ளைகள் களைகளைப் பிடுங்காமல் நெற்பயிர்களையே பிடுங்கி வருவதாகச் சிலர் சிலர் கேலிபண்ணி வருகின்றனர், நாட்டுக்கு எவ்விதசேவையும் செய்யாது கேலிப் பேச்சுக்கள் பேசிச் சோம்பேறிகளாக வாழ்பவர்களும்பள்ளிப் பிள்ளைகளுடன் சிரமதானப் பணியில் ஈடுபடவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுடன் சேர்ந்து களை பிடுங்கி வருவதினால் எவ்வித தவறுகளும் ஏற்படவில்லை. மாணவர்கள் இவ்வியக்கத்தில் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துவருகிறது.

மேற்கண்டவாறு நெல்லியடி மத்தியமாகா வித்தியாலய மாணவர்களின் களை பிடுங்கும் இயக்கத்திற்குத் தலைமைவகித்த கரைவெட்டி வடக்கு கிராமசேவையாளர் திரு ஆ. தாமோதரம்பிள்ளை ம்பகூட்டத்தில்கூறினார். சுமார் 50 மாணவர்கள் கிராய் நுகவில், வெல்லன் வயல்களில் களை பிடுங்கினர். ஆசிரியர்கள் திருவாளர்கள் கணேசமூர்த்தி, ஆர். ராதாகிருஷ்ணன் திரு மக்கேல் ஆகியோரும் மாணவர்களுடன் ஒத்துழைத்தனர்.

## 'குண்டு வீச்சுக்கு தடை வேண்டாம்'

### ஜோன்சனுக்கு ஆலோசனை

வாஷிங்டன், நவ. 16 தென்வியட்னாமில் கடமையாற்றும் அமெரிக்க இராணுவ அரசியல் ஆலோசகர்கள், வடவியட்னாம் மீதான குண்டுவீச்சில் நீடித்த தடை எதையும் செய்யக் கூடாதென ஜனாதிபதி ஜோன்ஸனுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

ஜோன்ஸனைச் சந்தித்துப் பேசியபோது, இந்த ஆலோசகர்கள் அவரிடம் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தனர்.

# இலங்கை- இந்திய உறவு

## திருமதி காந்தி அறிக்கை

புதுடில்லி, நவ. 16 இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கடந்த 20 ஆண்டுகளில் நிலவியதைவிட இப்பொழுது நெருங்கிய நல்லெண்ணம் நிலவுகிறதென்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி காந்தி லோகசபையில் கூறினார்.

அண்மையில் வெளிநாடுகளில் திருமதி காந்தி மேற்கொண்ட சுற்றுப்பிரயாணம் சம்பந்தமாக அவர் லோகசபையில் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

அண்மையில் தாம் இலங்கைக்கு விஜயஞ்செய்த பொழுது இலங்கை மக்கள் தம்மை உருக்கமாக வரவேற்றார்களென்று திருமதி காந்தி தெரிவித்தார்.

இலங்கைப் பிரதமருடன் தாம் மனம்விட்டுப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும் நட்புரிமையோடு பயனுள்ள பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையில் நெருங்கிய பொருளாதார ஒத்துழைப்பு வைத்துக்கொள்வது பற்றியும், இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பற்றியும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக அவர் கூறினார்.

# இந்திய 'ராக்கட்'

புதுடில்லி, நவ.18 இந்தியா தயாரித்துள்ள ராக்கெட்டுகளை விரைவில் பரீட்சிக்கவிருக்கின்றது.

திருவனந்தபுரத்துக்கருகிலுள்ள தும்பாராக்கட் ஆராய்ச்சி நிலையத்தில் இந்தியாவின் 'ரோஹினி' ராக்கட்டுகள் உருவாக்கப்பட்டுள்ளன. வானவெளியில் 60 கிலோமீட்டர்வரை இந்த ராக்கட்டுகளைக் கொண்டு சோதனை நடத்தமுடியும். வெளியார் உதவியில்லாமல் இவை தயாரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை மாணவிக்கு முதற்பரிசு

உடுப்பிட்டி வியாழன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்திய வெண்பாப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் மகளிர் ஆங்கில கல்லூரி மணவியான செல்வி மாலினி இரத்தினவேல் முதற்பரிசைப் பெற்றுள்ளார் இவருக்கு வெள்ளிக் கிண்ணமொன்றும் பரிசளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் 'கொலீச் ஒவ் எடியூக்கேசன்' உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், கொக்குவில் மேற்கு சில்வர் கிளப் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கொலீச் ஒவ் எடியூக்கேசன் கோஷ்டி 9—1 கோல்களால் எதிர்க் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டியில் வைத்தீஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணி முதல் இரவு 7மணி வரை ஆறுமுகம் ஆசிரியரின் கதாப்பிரசங்கமும் திருக்கார்த்திகைத்திருவிழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org